குழந்தைகள் பத்திரிகை

17-8-1975

60 காசு

# கோகுலம்



# FREE

# School Children!

## Get your **Free** copy of "Amar chitra katha" (worth Rs. 2/-) with every tin of **Ovomalt or milkotine**




- All you have to do is : cut the inside Aluminium tagger of the tin and send the same with 25 p. postage stamp with your complete address to the address given below.
- Write in 10 words why do you prefer ovomalt/milkotine.
- Mention the name of the child drinking ovomalt/milkotine

Write to :
**Foods Fats & Fertilisers Ltd.**
P.B. NO. 176, Madras-1

**OFFER OPEN TILL 30th SEP. '75**

## NOTE :

1. The Scheme is open in India (including Sikkim and Bhutan) and Nepal.
2. We will send you a beautiful TIME TABLE free of cost with each Book.
3. YOU MAY INDICATE 2 ALTERNATIVES FOR THE LANGUAGE OF THE BOOK. SIMILARLY, AT LEAST 5 ALTERNATIVES FOR THE TITLE OF THE BOOK, OUT OF 85 TITLES.
4. We will try our best to send you one of those books which you prefer in a particular language. However, we depend entirely on the supplier.
5. If you post us 10 Taggers at a time, we will send you a beautifully bound volume of 10 Books of "AMAR CHITRA KATHA". This you can preserve in your Library.
6. After posting the tagger, be enquiring from your parents whether any Mail has come in your name.
7. Inform your friends also about this Scheme.

புதிய சந்தா விகிதம்

இந்தியா

ஒரு வருடம் ரூ. 15.00
ஆறு மாதம் ரூ. 7.50

இதர வெளிநாடுகள்

ஒரு வருடம் ரூ. 33.00
ஆறு மாதம் ரூ. 16.50

மலர் 4
இதழ் 10
ஆகஸ்ட் 17. 1976
ராட்சஸ, ஆவணி 1




உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்

# கோகுலம்

சகோதரிகளே!

உங்கள் பத்திரிகை கோகுலத்தில் வரும் எல்லா விஷயங்களுமே எல்லோரும் படித்துப் பயன்படும்படியாக இருக்கின்றன. ஆனாலும் பெண் குழந்தைகளுக்காக — அவர்களுக்கு மட்டுமே — சில விஷயங்கள் இந்தப் பக்கத்தில் இடம் பெறும்.

நீங்களே சுலபமான தின்பண்டங்களைத் தயாரித்து உங்கள் நண்பர்களுக்கு வழங்கி மகிழச் சில செய்முறைகளும் தலையலங்காரம், உடல் அமைப்புக்கு ஏற்ப உடையணியும் முறைகள், பெண் குழந்தைகளே செய்யக் கூடிய கை வேலைகள், பூத்தையல், கோலம் போடுதல், பொம்மைகள் செய்தல் மற்றும் அழகு, ஆரோக்கியக் குறிப்புக்கள், பிறரோடு பழகும் முறைகள் என்று, நீங்கள் நல்ல பெண்களாக வளர்வதற்கு வேண்டிய பல்வேறு குறிப்புக்களை **உங்களுக்கே உங்களுக்குச்** சொல்லப் போகிறேன் இப்பகுதியில். ஆரம்ப இதழில் சுவையான ஓர் இனிப்புப் பட்சணம் செய்யும் சுலபமான முறையுடன் இப்பகுதியை ஆரம்பிக்கலாமா?



## மொறு மொறு கடலை பர்பி

கடையில் ஏக விலை கொடுத்து வாங்குவதை விட நாமே செய்தால் நிறையக் கிடைக்கும். 'நான் செய்தது' என்ற பெருமிதமும் கூட.


**வேண்டிய பொருள்கள் :** அரைக் கிலோ சர்க்கரை, ஒரு டீஸ்பூன் எஸன்ஸ் (ஸிரப்), ஒரு அவுன்ஸ் வெண்ணெய், அரை ஆழாக்கு கார்ன் ஃப்ளேக்ஸ், தோல் நீக்கி வறுத்து உடைத்த நிலக்கடலைப் பருப்பு கால் ஆழாக்கு. (வசதியுடையோருக்கு முந்திரி, பிஸ்தா, பாதாம்!)

**செய்முறை :** எவர்சில்வர் பாத்திரத்தின் உள்ளே கொஞ்சம் வெண்ணெயை எடுத்துத் தடவுங்கள். பிறகு சர்க்கரையை அதில் போட்டு, அது மூழ்கும் அளவு தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்துப் பாகு தயாரியுங்கள். சர்க்கரை கரைந்து ஒரு கொதி வந்ததும் வெண்ணெயையும் ஸிரப்பையும் அதில் கலவுங்கள். அடுப்பு சீராக எரியட்டும். காஸ் அடுப்பானால் மீடியம் குறியில் வையுங்கள். அடிக்கடி கிளறிக் கொண்டிருங்கள். பாகு கம்பிப் பதம் வந்து விட்டதா என்று பார்க்க, அதில் ஒரு சொட்டு, குளிர்ந்த நீருள்ள பேசினில் விடுங்கள். நீரிலிருந்து அதை எடுத்தால் கையில் ஒட்டாமல் கோலி போல உருண்டையாக வரும். இந்த நிலை வந்ததும் பாகை அடுப்பிலிருந்து கீழே இறக்கிக் கொஞ்சம் குளிர விடுங்கள். பிறகு கார்ன்ஃப்ளேக்ஸ், நிலக்கடலைப் பருப்பு இவைகளைப் பாகில் போட்டுக் கிளறி, முன்பே வெண்ணெய் தடவித் தயாராக வைத்திருக்கும் தட்டில் கொட்டிப் பரப்பியதும் சிறிது நேரம் கழித்துக் கத்தியினால் சிறு சிறு துண்டுகளாகக் கிடைக்கும்படி கீறிக் கோடு போடுங்கள். நன்றாக ஆறினதும் தனித் தனித் துண்டுகளாகக் கிடைக்கும். வாயில் போட்டால்...கரகரவென்று...ம்! படிக்கும்போதே நாவில் நீர் ஊறுகிறதா?

ஒரு முக்கிய விஷயம். அடுப்படியில் அதிகப் பழக்கம் இல்லாதவர்கள் பெரியவர்களை அருகில் வைத்துக் கொண்டு இதைச் செய்ய வேண்டும்.

அடுத்த இதழில் நீங்கள் அணியும் உடைகளுக்கு மாட்சான வர்ணங்களில் மாலை தயாரித்துக் கொள்ளும் முறையையும் வேறு சில கைவேலைகளையும் பற்றிச் சொல்லுகிறேன்.

— **கே. சாந்தா**





## 10. வேடமும் மேன்மை தரும்

**வீ**ரமாபுரத்தில் மாவீர சிங்கன் மாட்சியுடன் ஆட்சி புரிந்தான். அம் மன்னர் பெருமானுக்கு ஆண் சந்ததியில்லை. ஒரே பெண் மகவுதான். அவள் அழகிலும், அறிவிலும், மாண்பிலும், வீறு பெற்று விளங்கினாள். அவளுக்கு ஏற்ற வரனைத் தந்தையார் தேடிக் கொண்டிருந்தார்.

அந்நகருக்கு வெளியேயுள்ள குல தெய்வத்தை வணங்கி வர இளவரசி எண்ணினாள். மாலை நாலு மணிக்குப் போக வேண்டும் என்று திட்டமிட்டாள். மன்னர் தம் புதல்வி பல்லக்கில் போக ஏற்பாடு செய்தார். அவள் வீதி வழியே போகும்போது ஆண்கள் ஒருவரும் வீதியில் நடமாடக் கூடாது என்று தண்டோராப் போடுமாறு செய்தார்.

மாலை மணி நான்கு. இளவரசி தாய் தந்தையரை வணங்கி விட்டு, பூசைக்குரிய தேங்காய் பழங்கள், சூடம் சாம்பிராணி, ஊதுபத்தி, இளநீர், தேன், பால், பன்னீர், மலர் முதலிய பொருள்களை ஒரு கூடையில் நிறைத்துக் கொண்டு பல்லக்கில் புறப்பட்டுச் சென்றாள். அவள் வானத்தில் இருந்து மண்ணில் வந்த மதிக் கொழுந்து போல் காட்சியளித்தாள்.

ஒரு சலவைத் தொழிலாளி மகன் காலையிலேயே துணி தோய்க்கும் துறைக்குப் போய்விட்டான். வீதியில் ஆண்கள் உலாவக் கூடாது என்று பறையறைந்ததை அவன் அறிந்தானில்லை.

தோய்த்த துணிகளை முதுகில் சுமந்து கொண்டு வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்த அந்த வாலிபன், இரு மகளைப் போலக் காட்சி தரும் அரச குமாரியைக் கண்ணுரைக் கண்டான். மதுவுண்ட வண்டு போல் மயங்கினான்.

காவலர்கள், "அடே மூடனே! நீ இப்படி வந்தது பிழை. விரைவில் போய்விடு" என்று கூறி விரட்டினார்கள். அவன் அவளிடம் உள்ளத்தைப் பறி கொடுத்து விட்டு வெற்றுடம்பாக வீடு போனான்.

அவனுடைய தாய், "மகனே! இந்தா இந்தக் கஞ்சியைக் குடித்துவிட்டு தோய்த்த ஆடைகளை மடித்து ஒழுங்கு செய்" என்றாள்.

"அம்மா! நான் வருகின்ற வழியில் மன்னர் பெருமானுடைய மகளைப் பார்த்தேன். என் உள்ளம் அழலிடைப் பட்ட மெழுகு போல் உருகிவிட்டது. தாயே! நான் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்றுமுடிவு செய்து கொண்டேன். அவளை அடைந்தாலன்றி நான் உணவு கொள்ள மாட்டேன். இது உறுதி. ஆ ஹா! அவள் ஆயிரம் மாற்றுத் தங்கத்தால் உருக்கி வார்த்து மெருகிட்ட அற்புதச் சிலை..."

"மகனே! உனக்கென்ன பைத்தியமா? அவளோ அரசிளங்குமரி. நீயோ ஏழைச் சலவைத் தொழிலாளி மகன். அவள் எங்கே? நீ எங்கே? மேரு மலை எங்கே? அணு எங்கே? இதனை மன்னர் கேட்டால் உன் தலை நிலைக்குமா? மூடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா? சீ, இப்படியெல்லாம் உளறாதே. வந்து கஞ்சி குடித்துவிட்டு உன் வேலையைச் செய்". என்றாள் தாய்.

அவன் ஓட்டைக் காதில் தாய் சொல் ஏறவில்லை. எப்படியும் அரச குமாரியை மணந்தே தீர வேண்டும் என்ற ஆசைக் கனல் பொங்கி எழுந்தது.

**அ**ன்றிரவு முகமூடியிட்டு கரிய உடை உடுத்து அரண்மனைக்குச் சென்று, ஒருவரும் அறியா வண்ணம் நுழைந்து, படுக்கை அறையில் சென்று அரசனும் அரசியும் அரச குமாரியும் படுக்கும் கட்டிலின் கீழ் ஒளிந்திருந்தான்.

இரவு பத்து மணிக்கு அரசனும் அரசியும் அரச குமாரியும் அந்த அறையில்

# அறநெறி

திருமுருக கிருபானந்த வாரியார்

வந்து, அங்குள்ள தெய்வத் திருவுருவை வணங்கிவிட்டுப் படுத்தார்கள்.

இரவு பன்னிரண்டு மணி. ஓசை ஒலியெல்லாம் அடங்கி, எங்கும் அமைதியும் நிம்மதியும் நிலவின. அரச குமாரி கண்ணயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

அரசனும் அரசியும் உறங்காது விழித்துக் கொண்டிருந்தார்கள். கவலையிருந்தால் உறக்கம் வராது.

''தேவி! நம் செல்வப் புதல்விக்கு திருமணம் செய்ய வேண்டும். தக்க வரன் வரவேண்டும். தெய்வத் திருவருள் என்று வருமோ?''

''அரசே! நம் அன்புக் குமாரி மன்னர்களை மணந்து கொள்ள மாட்டாளாம். பெரிய ஞானி ஒருவரைத்தான் திருமணம் செய்து கொள்வாளாம். அவள் இப்படி அசைக்க முடியாத எண்ணத்தை உடையவளாய் இருக்கிறாள். ஆகவே, அவள் விருப்பப்படிதான் செய்ய வேண்டும்.''

இப்படி அரசனும் அரசியும் உரையாடியதைக் கட்டிலின் கீழே ஒளிந்திருந்த ஏகாலிச் சிறுவன் கேட்டான். மெல்ல நழுவி வெளிப்பட்டான். அவன் மனத்தில் ஒரு சூழ்ச்சி தோன்றியது. பொழுது விடிவதற்குள் ஒரு படி திருநீரைப் பூசிக் கொண்டான். நிரம்ப உருத்திராக்க மணி மாலையைப் பூண்டு கொண்டான். ஒரு கமண்டலத்தை எடுத்துக் கொண்டு அரண்மனை நந்தவனம் போய், ஒரு மகிழ மரத்தின் கீழ் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டிருந்தான்.

அதிகாலையில் மலர் பறிக்க வந்த அரண்மனை ஏவலர்கள் இந்த வேடச் சாமியாரைக் கண்டு, அரசனிடம் ஓடி, ''வேந்தர் பெருமானே! நம் அரண்மனை நந்தவனத்தில் ஒரு மகான் நிஷ்டையில் அமர்ந்திருக்கிறார்'' என்று கூறினார்கள்.

அரசனும், அரசியும், அரச குமாரியும் பழங்கள் நிறைந்த தங்கத் தட்டுடன் சென்று, அப் போலிச் சாமிகளின் திருவடியில் அடியற்ற மரம் போல் வீழ்ந்தார்கள். கைகூப்பி நின்று ''மாதவ மணியே! இவள் என் தவப் புதல்வி. இவளை நீர் திருமணஞ்செய்து கொண்டு, உள்ளத் துறவியாய், ஜனகரைப் போல் இந்த ராஜ்யத்தை ஆட்சி புரிய வேண்டும்'' என்றான் மன்னன்.


ஏகாலிச் சிறுவன் எண்ணுகின்றான்: போலி வேடம் போட்ட என் காலில் மணி மகுடம் அணிந்த மன்னர் பெருமான் வணங்கி, தன் அரசையும் அரசிளங் குமரியையும் தருகின்றேன் என்கிறார். ஆ! நாம் உண்மைத் துறவியாகவே ஆனால் பதினான்கு உலகங்களும் நம்மைப் பணியுமே? இனி இந்த ஆசா பாசங்கட்கு இடம் தரக் கூடாது. என்று எண்ணி நெருப்பைமிதித்தவனைப் போல் குதித்து எழுந்தான். ஆசையாகிய பஞ்சு அவன் உள்ளத்தெழுந்த ஞானக்கினியில் வெந்தது. ''எனக்கு உம் பெண்ணும் பொன்னும் வேண்டாம்'' என்று கூறிவிட்டு ஓடினான். கானகம் சென்று கண் மூடி மௌனியாகித் தவம் செய்து நற்கதி பெற்றான். வேடமும் மேன்மை தரும்.



முன்னொரு சமயம், தன் தந்தையிடத்தில் மிகுந்த பக்தியும் கடமை உணர்வும் கொண்ட ஒரு புதல்வன் இருந்தான். அந்தக் காலத்தில், உடலில் வலிமை குறைந்த, வயது முதிர்ந்த பெற்றோர்களை மலைக்குக் கொண்டு சென்று ஒதுக்கி விட வேண்டும் என்று ஜப்பானில் ஒரு ராஜகட்டளை இருந்தது.

நேசமும் பாசமும் மிக்க இந்த மகனின் தந்தையும் வயது முதிர்ந்தவரானார்; அவரை மலையில் சென்று விட்டு வருவதற்கான நேரம் இப்போது வந்துவிட்டது. எனவே, அந்தப் புதல்வனும் தன் தந்தையை முதுகில் சுமந்து கொண்டு அடர்ந்த மலைகளினூடே சென்றான்.

அவ்வாறு, செல்லும்போது, அத் தந்தை வழியில் இருந்த மரங்களின் கிளைகளை ஒடித்து நிலத்தில் போட்டுக் கொண்டே சென்றார். தன் மகன் திரும்பி வரும்போது வழி தவறிவிடுவானோ என்று எண்ணி, அவனுக்கு வழி தெரிவதற்காக அப்படிச் செய்தார்.




ஒரு மலையின் மிக உயர்த்தில் மறைவுக்கு ஒதுக்கமான ஓரிடத்தில், அப்புதல்வன் மெல்லிய இலை தழைகளைப் பரப்பி, அதன் மேல் தன் தந்தையை அமரச் செய்தான். பிறகு அவரைப் பிரிய மனமின்றி நெஞ்சம் நெகிழ்ந்துருகி நின்றான். அப்போது அவன் தந்தை, அருகிலிருந்த ஒரு கிளையை ஒடித்துக் காட்டி, ''அன்பு மகனே! நீ வழி தவறி விடுவாயோ எனக் கருதி இதுபோன்ற சிறு கிளைகளை வரும் வழியில் ஒடித்துப் போட்டுள்ளேன். அதனால் நீ உன் வழியை அறிந்து திரும்பிச் செல்வாயாக! இனி நீ, போய் வா, மகனே!' என மனம் உருகிக் கூறினார்.

தன் தந்தையின் அன்புப் பெருக்கினால் ஆனந்தக் கண்ணீர் சொரிந்த அப் புதல்வன் தன் தந்தையை மலையிலே விட்டு வர, மனமொப்பாது, மீண்டும் அவரைத் தோளில் சுமந்துகொண்டு மலையிலிருந்து இறங்கிக் கீழே வந்தான்.

இவ்வாறு அவன் செய்தது 'அந் நாட்டரசனுக்குத் தெரிந்தால் அவனும் அவன் தந்தையும் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். அவரது தண்டனைக்குப் பயந்து, அப்புதல்வன் தன் வீட்டின் கொல்லைப்புறத்தில் குகை போன்ற குழி ஒன்றைத் தோண்டினான். அதில் தன் தந்தையை மறைத்து வைத்தான். ஒவ்வொரு நாளும் அக்குழியிலிருக்கும் தன் தந்தைக்கு உணவு கொண்டு கொடுப்பது வழக்கம்.

ஒருநாள் அந்நாட்டரசன், 'சாம்பலினால் கயிறு செய்து தனக்குக் கொடுக்க வேண்டும்' எனத் தன்னாட்டின் பல பாகங்களிலும் முரசறைந்தான். 'சாம்பலைக் கயிறாக்குவதா? இதென்ன புதுமை?' என அந்நாட்டு மக்கள் வியந்தார்கள்; எவராலும் இப்புதிருக்கு விடை காண முடியவில்லை.

இதைக் 'கேள்வியுற்றார் அவனது தந்தை; தன் மகனிடம், ''கெட்டியான ஒரு கயிற்றை எடு; பலகை மீது பதிய வைத்து அதை எரித்துவிடு'' என்றார். அவனும் அப்படியே செய்தான். சாம்பலினால் செய்த கயிறு அவனுக்குக் கிட்டியது. அதை அவன் அந்நாட்டரசனிடம் கொண்டு சென்றான். இந்தச் சிக்கலான புதிருக்கு விடை கண்டதால், அந்த அரசன் அவனைப் பாராட்டினான்.

சில நாட்கள் கழிந்தன. அந்த அரசன் அவனிடம் நீண்ட மரக் குச்சியைக் காட்டினார். அதன் எந்த முனையில் வேர் இருந்ததென்று உறுதிப்படுத்துமாறு, அரசன் அவனுக்கு ஆணையிட்டான். தனயனும் தன் தந்தையிடம்

அதைக் காட்டி, என்ன செய்வது என்று கேட்டான்.

அவன் தந்தை அவனிடம், ''மரக் குச்சியை மெதுவாக நீரில் மிதக்கவிடு. எந்த முனை எளிதில் நீரில் மிதக்கிறதோ அந்த முனையே அதன் தலைப்பாகம்; எந்த முனை நீருள் சற்று அமிழ்கிறதோ அந்த முனையே அதன் வேர்ப் பாகம்' எனப் பதிலளித்தார். அவர் கூறியவாறே மகனும் செய்து அதன் அடியையும் முடியையும் கண்டான்; அதை அரசரிடமும் கூறினான். அருமையான முறையில் இரண்டாம் புதிருக்கும் விடை கண்ட அவன் திறத்தைக் கண்டு அரசன் வியந்தான்; பரிசுகள் அளித்துச் சிறப்பித்தான்.

இந்த இரு புதிர்களையும்விட கடினமான புதிர் ஒன்று அந்நாட்டரசனுக்குத் தோன்றியது. அரசன் அவனிடம், ''கொட்டாமலே முழங்குகின்ற மத்தளம் ஒன்று செய்ய வேண்டும்'' என ஆணையிட்டான். மீண்டும் தன் தந்தையைக் கலந்து, இந்தப் புதிருக்கு விடை காண முயன்றான் பையன். அவன் தந்தை ''இது ஒன்றும் கஷ்டமல்ல. போ! போய்த் தோல் வாங்கி வா. பின் மலைக்குச் சென்று ஒரு தேனீக் கூட்டைக் கொண்டு வா'' என்றார். தந்தை சொற்படியே அவனும் செய்தான். தந்தை அவனுக்குத் தேனீப் பெட்டியை உள்ளே அமைத்து ஒரு மத்தளம் செய்து தந்தார். அவனும் அந்த மத்தளத்தை அரசனிடம் கொண்டு சென்றான்.


அரசன் அந்த மத்தளத்தைத் தொட்டவுடன் அதனால் அதிர்ச்சியடைந்த தேனீக்கள் உள்ளுக்குள்ளே பறந்து அந்த மத்தளத்தின் மெல்லிய தோலில் மோதின. முடிவில், யாரும் கொட்டாமலேயே மத்தளம் ஒலிக்கலாயிற்று.

அவனை அரசன் பெரிதும் பாராட்டி, இவ்வளவு அதிசயமான முறையில், விடைகளை எவ்வாறு அவனால் கண்டுபிடிக்க முடிந்தது என்று கேட்டார்.

அப்போது அவன், ''மிகவும் இளவயதானதினால் எனக்குப் போதிய அறிவும் அனுபவமும் கிடைக்க வாய்ப்பில்லை. உண்மையில் வயதுமுதிர்ந்த அனுபவம் மிக்க என் தந்தையிடமிருந்துதான் எல்லா விடைகளையும் நான் தெரிந்து கொண்டேன்'' என மொழிந்தான். மேலும் அவன் கண்ணீர் மல்க, ''என் தந்தையை மலை மேல் விட்டுப் பிரிந்து வர என்னால் முடியவில்லை. அதனால்...அவரை என் வீட்டிலேயே ஒளித்து வைத்திருக்கிறேன்'' என்று எல்லா விஷயங்களையும் கூறினான்.

தனயனின் கதையைக் கேட்டு மகிழ்ந்த அரசர், ''நன்று. வயது முதிர்ந்தவர்கள் அரிய அனுபவசாலிகளாகவும் இருப்பார்கள் என்று எனக்கு முன்பே தெரியவில்லை. இப்போதிருந்து யாரும் வயதான பெற்றோர்களை மலைகளில் விட்டுவிட்டு வர அனுமதிக்க மாட்டேன்'' எனக் கூறினார்.

அதன் பின்பு முதியோர்கள் தம் இளம் தலைமுறையினரோடு இன்பமாக வாழ்ந்து வந்தனர்.



தெரிஞ்சுக்கோ

# டிரான்ஸ் சைபீரியன் இருப்புப்பாதை

ரயில் வண்டித் தொடர் ஒன்று ஏழு நாட்களுக்கு ஒரு தடவை கண்டம் விட்டுக் கண்டம் - தாண்டி மறுகோடிக்குப் பயணம் செய்கிறது. அவள் ஒரு பெருமூச்சு விட்டிருப்பாளா?

ரயில் வண்டியை அவள் என்று குறிப்பிடுவானேன்? அந்த வண்டிக்கு என்ன பெயர் தெரியுமோ? 'ரோஸியா எக்ஸ்பிரஸ்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

ரஷியாவில் பெரும்பாலான பெண்களின் பெயர் ரோஸியாதான். பொறுமைக்கு எல்லை வகுப்பவள் பெண்ணாயிற்றே அவள்! ரஷியாவின் விடுதலை வீரர்களுக்கும், நாஜிக் கட்சியினருக்கும், இன்று நமக்கும் சலியாமல் உழைத்து வருகிறாள் ரோஸியா!

உலகிலேயே மிக நீளமான இந்த இருப்புப்பாதை கிட்டத்தட்ட ஏழாயிரம் கி.மீட்டர்கள் மின்சாரத்தாலும், அடுத்த மூவாயிரம் கி.மீட்டர் தூரத்தை நீராவி எஞ்சினாலும் கடக்கிறது. இதுதான் டிரான்ஸ் — சைபீரியன் இருப்புப் பாதை.

கிழக்கு ஐரோப்பாக் கண்டத்தில்- ரஷ்யாவின் தலைநகராகிய 'மாஸ்கோவிலிருந்து' ஆரம்பித்து, வட ஆசியாவின் பசிபிக் கடலோரப் பகுதியான 'விளாடிவாஸ்டாக்கை' அடைகிறது. டிரான்ஸ் சைபீரியன் இருப்புப்பாதையில் ஓடும் 'ரோஸியா எக்ஸ்பிரஸ்'க்கு முன்பு பயணம் பதினொரு நாட்கள் ஆயினவாம்.

அமெரிக்கா சூயஸ் கால்வாயைக் கண்டு பிடிப்பதற்கு முன்பு தரைமார்க்கத்தில், போக்குவரத்துத் துறையில் சிகரமாக விளங்கியது இந்த இருப்புப் பாதை.

டிரை கிளீனிங், ஷாப்பிங், ஹேர் டிரஸ்ஸிங், வசதிகளுடன் மேற்கத்திய உணவு, ஆசிய நாட்டு உணவு வகைகள் இரண்டு முதலியனவும் இங்கே வழங்கப்படுகின்றன.


ரயிலில் பணிபுரியும் பெண்கள்

தினசரிப் பத்திரிகைகள், வார, மாத இதழ்கள், நாவல்கள், முதலியனவும் இதிலுள்ள கடைகளில் கிடைக்கும். இதில் பல்வேறு நாட்டு மொழிப் பத்திரிகைகளும் உண்டு. ஒவ்வொரு பெட்டிக்கும் ரேடியோ வசதியும் உண்டு.

'பயணம் செய்யும் போது அவன் ஒரு கவிஞனாக இருந்தால் அருமையான கவிதை வடிப்பான். கதாசிரியனாக இருந்தால் அவன் பல கதைகளுக்கு 'கருப்பொருளை'த் தேடிக் கொள்வான். பொருளாதார நிபுணனாக இருந்தால் அவன் மனதில் அருமையான திட்டங்கள் பல உருப்பெறும். அரசியல்வாதியாக இருந்தால்... என்று அப்படியே அந்தக் கட்டுரையை முடித்துவிட்டார் - இதில் பயணம் செய்த பிரஞ்சுப் பத்திரிகையாளர் ஒருவர்.

ரஷ்யாவின் சமவெளிகள், சயான் மலையின் அற்புதத் தோற்றம், தூரக் கிழக்குப் புல்வெளிகள், ஒல்கா, ஒப், எனிசே, ஆமூர் போன்ற புகழ்பெற்ற அகன்ற நதியோரங்களின் வனப்புக்கள், நீர்நிலைகள், பைகால் ஏரியின் எழில்மிகு காட்சி, நீர் மின்சக்தி நிலையங்கள், அதனைச் சூழ்ந்து நிற்கும் பனிப் படலங்கள் முதலியன கண்களுக்கு விருந்து.

ரயிலில் பயணம் செய்யும்போது உடம்புக்கு ஏதாவது வந்து விட்டால்? அதற்கும்கவலை இல்லை. சகல வசதிகளுடன் 'மினி' ஆஸ்பத்திரியும் உண்டு.

இந்த ரயில் வண்டியை இயக்கும் டிரைவருக்கு 'டிராபிக்' இடைஞ்சலின்றி வழிவகுத்துக் கொடுக்கிறது ஆட்டோமாடிக் கண்ட்ரோல். இதை கம்ப்யூட்டர் கருவி இயக்குகிறது.

இதில் பணியாற்றுபவர்கள் பெரும்பாலும் பெண்களே!

முன் கண்ணாடியில் படியும் பனிப் படலத்தை அவ்வப்பொழுது விலக்கிக் கொள்ள சக்தி வாய்ந்த 'வைப்பர்' (துடைப்பான்கள்) உண்டு. எந்தப்பகுதியைக் கவனிக்கா விட்டாலும் வைப்பரைக் கவனிக்காமல் வண்டியில் ஏற மாட்டார் டிரைவர்.

தற்சமயம் பயணிகளின் பெட்டிகளை விடச் சரக்குகள் ஏற்றி செல்லும் பெட்டிகளின் எண்ணிக்கைதான் அதிகம்.

ரயிலில் பயணம் செய்பவருக்கு சுற்றுப் பக்க நிகழ்ச்சிகளைப் பற்றி, இடங்களைப் பற்றி விரிவாக எடுத்துச் சொல்ல நான்கு மொழி தெரிந்த 'கைடுகளும்' உண்டு.

- பாவை சந்திரன்

# மாய மோதிரம்


**1**

— வாண்டுமாமா —

நீண்ட நெடுங் காலத்துக்கு முன்னே, இந்த உலகம் இளமையாக இருந்த போது நிகழ்ந்த கதை இது. உலகம் தோன்றி வெகு காலமாகிவிடவில்லை. அப்போது மலைகளும், நதிகளும், கடல்களும்கூட வாலிப வரைப்புடன் இருந்தன. விநோதமான மிருகங்கள் எல்லாம் வாழ்ந்து வந்த காலம் அது. ராட்சதர்களும், குள்ளர்களும், வீரர்களும் தேவதைகளும் தங்கள் புகழ் மணக்க வாழ்ந்திருந்த காலம். நெருப்பாக மூச்சுவிடும் பயங்கர மிருகங்களும், நடந்தாலே நிலம் நடுங்கும் படியான ராட்சதர்களும் இதற்கு நேர்மாறுவ தோற்றத்தோடு கட்டை குட்டையான குள்ளர்களும் வாழ்ந்து வந்தார்கள். குட்டிச் சாத்தான் என்று அழைக்கப்படும் இந்தக் குள்ளர்களின் பலமும் திறமையும் அபாரமானவை. பூமியில் உள்ள தங்கம், வெள்ளி இவைகளைச் சேகரித்துப் பதுக்கி வைத்துப் பாதுகாப்பதுதான் இந்தக் குள்ளர்களின் வேலை. பூதம் காத்த புதையல் என்று சொல்லுவதில்லையா? அத்தகைய புதையல்களைக் காப்பது இந்தக் குள்ளப் பூதங்கள்தான். அப்படிப்பட்ட பூதங்கள் வாழ்ந்த காலத்திலே நிகழ்ந்த கதைதான் இது.

பூமியைப் போலவே கடல்களிலும் எவ்வளவோ அதிசயங்கள். கடல் அரசனின் மாளிகை ஆழ் கடலின் அடியிலே இருந்தது. கடலிலேயே வாழ்ந்த அழகிகளும் உண்டு.' இவர்களைக் கடல் கன்னிகள் என்பார்கள். மனித உடலும் மீன் உடலும் அதன் லாகவமும் இணைந்ததொரு பிறவி இவர்கள். நம் நாட்டு நதிகள் எல்லாம் பெண் தேவதைகளாகத்தானே வர்ணிக்கப்படுகின்றன? கங்கை, யமுனை, காவேரி, கிருஷ்ணை, கோதாவரி, நர்மதை இவர்கள் எல்லாம் நதிப் பெண்கள் தானே ? ஒவ்வொரு நதிக்குமே அதி தேவதை ஒரு பெண்தான்.

இமய மலையிலிருந்து பெருகி ஓடிய எவ்வளவோ ஆறுகளில் தங்க நதி என்





ஓர் ஆறு. ஆழமும் அகலமும் மிகுந்த பெரிய ஆறு அது. மிகவும் ஆழமான அதன் மையப் பகுதியிலே கலங்கரை விளக்குப் போல் ஒரு கற்பாறை தூணாகத் துருத்திக் கொண்டு நெடுதுயர்ந்து நின்றது. அதன் உச்சியிலே உள்ளதோர் குழிவிலே தகதகத்துக் கொண்டிருந்தது தங்கம் — குழம்பாக. அதிலிருந்து வீசிய ஒளி அந்த ஆற்று நீரையே தங்க நிறமாக்கிக் கொண்டிருந்தது. அதனால்தான் அதற்குத் தங்கநதி என்று பெயர் வைத்தார்களோ என்னமோ! இந்தத் தங்க நதியின் நடுவிலிருக்கும் சொக்கத் தங்கத்தைக் காவல் காத்து வந்தாள் ஸ்வர்ணமுகி என்ற நதிப் பெண். இவளுக்கு இரு தோழிகள். இந்த மூவரும் எப்போதும் தகதகக்கும் தங்கக் குழம்புள்ள பாறை அருகிலேயே நீரில் மூழ்கியும் நீந்தியும் பாறை மீது அமர்ந்தும் அந்தத் தங்கத்தைக் காவல் காத்து வந்தார்கள். தங்க நதியின் சொக்கத் தங்கத்துக் காவல் கன்னிகள் என்று இவர்களை அழைப்பார்கள்.

ஒரு நாள், ஸ்வர்ணமுகி தன் தோழிகளுடன் ஆற்றிலே விளையாடிக் கொண்டிருந்தாள். விடியற்காலை வேளை. புலர்ந்தும் புலராப் போது. விடிவெள்ளி மங்கும் வேளை. புள்ளினங்கள் கண் விழிக்கும் போது. தங்கச் சலங்கைகளை வெள்ளிக் கிண்ணத்தினுள் இட்டுக் குலுக்கினாற் போன்று கலகலவென்ற அவர்களின் இனிமையான சிரிப்பொலிக்கு 'ஹோ'வென்று சுழித்து ஓடும் நதியின் இரைச்சல் சுருதி கூட்டிக் கொண்டிருந்தது. மீன்களைப் போல நீரிலே துள்ளிக் குதித்து நீந்தினார்கள் மூவரும். முத்தான ஆற்று வெள்ளத்திலே முக்குளித்து மூழ்கி நெளிந்து நெளிந்து நீரைக் கிழித்துக் கொண்டு ஓடிப் பிடித்து விளையாடினார்கள். அந்தத் தங்க நதியில் வெள்ளி நீரை விளையாட்டாகத் தட்டி, ஒருவர் முகத்தில் ஒருவர் வாரி அடித்து மூச்சுத் திணற வைத்து









மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். கன்னிகளின் இந்தக் கலகலப்பும், சிரிப்பும் கும்மாளமும் தங்க நதியின் இரு கரைகளிலும் நெடிதுயர்ந்து நின்ற பாறைகளில் மோதி இனிமையாக எதிரொலித்து ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன.

அப்போது...!

அந்த வழியாக வந்து கொண்டிருந்தான் குண்டோதரன். அந்தக் காலத்திலே வாழ்ந்த வலிமை மிக்க குள்ளர்களின் இனத்திலே வந்தவன் இந்தக் குண்டோதரன். கட்டுமஸ்தான உடல். இடையிலே தோலாடை. அழகிகளின் சிரிப்பொலி அவன் நடைக்குத் தடையிட்டது. உற்றுப் பார்த்தான். நடு ஆற்றிலே அவர்கள் சிரித்துக் கும்மாளமிட்டபடி குளித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். அந்தக் கருக்கிருட்டிலும் அவர்களுடைய நிலையையும் செயலையும் துல்லியமாகக் காட்டிக் கொண்டிருந்தது அந்தத் தங்கக் குவையிலிருந்து வீசிய மென்மையான ஒளி. தங்க விக்கிரகங்களாகத் தோன்றினார்கள் குமரிகள் மூவரும். அந்தச் சொர்ணமயமான மங்கல மஞ்சள் ஒளியிலே முழுகி நின்ற அந்த அழகிகளின் தோற்றம் தன்னிச்சையாகப் போய்க் கொண்டிருந்த குண்டோதரனை இழுத்து நிறுத்தியது.

''குமரிகளா ! என்ன கொண்டாட்டம் ? காலைக் குளியலா?'' என்று குரல் கொடுத்தான் குள்ளன். குள்ளர்கள் எல்லோருடனும் சகஜமாகப் பேசுவார்கள். அதுவும் நதிப் பெண்களுக்குக் குள்ளர்களோடு பரிச்சயம் அதிகம். நதியோரத்துக் காடுகளும் மலைக் குகைகளும்தானே குள்ளர்களின் இருப்பிடம்? ஆகவே, அடிக்கடி அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு நதிக் கன்னிகளுக்கு உண்டு.

''குண்டோதரா, நீ எங்கே இந்த அதிகாலை வேளையில் இப்படி வந்தாய்?'' என்று கள்ளமில்லாமல் கேட்டாள் ஸ்வர்ணமுகி. அப்போது கீழ் வானிலே



தகதகத்துக் கொண்டு கிளம்பினான் கதிரவன். குன்றின் குழியிலே குமைந்து கொண்டிருந்த சொக்கத் தங்கக் குழம்பிலே சூரியனின் ஒளி படவே அதிலிருந்து ஒளி பளிரிட்டு ஜ்வலிக்கலாயிற்று. குள்ளனின் கண்களைக் கூச வைத்தது அந்த ஜோதி. புறங் கையால் ஒளிக் கீற்றுக்களை ஒதுக்கிப் பார்வைக்கு வேலி அமைத்துக் கொண்டு கேட்டான், "அது என்ன அத்தனை பிரகாசம் அங்கே?"

கலகலவென்று சிரித்தார்கள் நதிக் கன்னிகள். பிறகு சொன்னார்கள், "இந்த நதியின் ஜீவனே அந்த ஒளி தானே, இது தெரியாதா உனக்கு? தங்க நதியின் சொக்கத் தங்கம் — எங்கள் சொத்து, உடைமை அதுதான். இதைக் காவல் காக்கவே நாங்கள் இங்கு இருக்கிறோம்."

"காவல் காக்கும்படி அதில் என்ன அதிசயம்?" குண்டோதரனுக்குத் தங்கம் என்றதுமே உடலில் சூடு ஏறியது. தங்கம், வெள்ளி, நவரத்தினம் போன்ற பொக்கிஷங்களைப் பதுக்கி வைத்துக் காப்பது குள்ளப் பூதமான அவன் குணமாயிற்றே! அதுவும் இந்தத் தங்கத்தில் ஏதோ அதிசயம் வேறு இருப்பதாக நதிக் கன்னிகள் கூற வ குண்டோதரனின் ஆர்வம் பெருகியது.

"இருக்கிறதினால்தானே இதை இப்படி அல்லும் பகலும் கட்டிக் காக்கிறோம்."

"அதைத்தான் சொல்லுங்களேன், தெரிந்து கொள்ளுகிறேன்." அடக்க மாட்டாத ஆவலுடன் கேட்டான் குள்ளன்.

"இந்தக் குன்றின் உச்சியிலே தகதகத்துக் கொண்டிருக்கும் தங்கக் குழம்பை யார் ஒருவர் எடுத்துப் போய் அதிலே ஒரு மோதிரம் செய்து அணிந்து கொள்ளுகிறார்களோ அவர்கள் இந்த உலகையே ஆளும் தகுதியைப் பெறுவார்கள். அத்தகைய மந்திர சக்தி இந்தத் தங்கத்தினால் உருவாகும் மோதிரத்துக்கு உண்டு. ஆனால்...." என்று நிறுத்தினாள் ஸ்வர்ணமுகி.

"ஆனால்... என்று அரை போடுகிறாயே, என் ஆசைக்கு....." என்றான் குண்டோதரன். அந்தத் தங்கத்தைப் பறித்துப் போவதோ அதில் ஒரு மோதிரம் பண்ணுவதோ அவனுக்கு முடியாத காரியமல்ல. 'ஆனால்' என்ற அவர்கள் பேச்சு அதில் ஏதோ நிபந்தனை இருப்பதைத் தெரிவிக்கிறதே என்று தவித்தான் குண்டோதரன்.

"முக்கியமான விஷயமாயிற்றே! அத்தனை பெரிய பாக்கியத்தை அடைவதற்கு அந்த நபர் ஒரு தியாகம் செய்தாக வேண்டும். அப்போதுதான் அந்த மாய மோதிரம் தன் மந்திரத் தன்மையினால் அவனை மகிழ்விக்கும்."

"அப்படி என்ன தியாகமோ?"

"இந்த உலகிலேயே மிக உன்னதமான அன்பை இழப்பதற்கு யார் தயாராக இருக்கிறார்களோ அவர்களுக்கே அந்தப் பாக்கியத்தை இந்த மோதிரம் அளிக்கும். அன்பு இல்லாத வாழ்வை யார்தான் விரும்புவார்கள்? ஆகவேதான் எங்கள் பாதுகாப்பில் உள்ள இந்தத் தங்கத்துக்கு ஆபத்து வந்ததில்லை" என்றாள் ஸ்வர்ணமுகி.

"இந்த உலகிலே உன்னதமானது அன்புதானா?" என்று கேட்டு விகாரமாகச் சிரித்தான் குண்டோதரன். கன்னிகளுக்கு அவன் கேள்வியும் சிரிப்பும் வியப்பாக இருந்தன.

"அன்பு — அது எனக்குத் தேவையில்லாத ஒன்று" என்று கூறியபடியே குள்ளன் குண்டோதரன் பாறைகளின் மீதாக அவர்களை நோக்கித் தாவி ஓடி வந்தான். அவன் செய்கையை அந்தக் கன்னிகள் புரிந்து கொள்வதற்கு முன்பாகச் சரசர என்று குன்றின் உச்சிக்கு ஏறினான். அவர்கள் திகைப்பிலிருந்து விடுபடு முன்னே பாறையோடு தங்கக் குழம்புள்ள குழியைப் பெயர்த்து எடுத்துக் கொண்டான் குண்டோதரன். குள்ளர்களின் பலம் பயங்கரமானது. அரக்கர்களைவிட அதிக பலம் படைத்தவர்கள் குள்ள வடிவுடைய இந்தப் பூதங்கள்.

"எனக்கு அன்பினால் ஆகக் கூடியது ஏதுமில்லை. என் மீது அன்பு செலுத்துபவரும் யாரும் இல்லை" என்று எக்காளச் சிரிப்புடன் கீழே இறங்கினான் குண்டோதரன். குன்றின் உச்சியிலே தகதகத்துக் கொண்டிருந்த தங்கம் இப்போது குண்டோதரனின் கையிலே இருந்த பாறையிலே பளபளத்துக் கொண்டிருந்தது. அதன் ஒளி இப்பாது குள்ளனை தங்கநிறமாக்கி இருந்தது.

திகைப்பிலிருந்து விடுபட்ட காவல் கன்னிகள் நிகழ்ந்துவிட்ட விபரீதத்தை உணர்ந்தவர்களாக, "குண்டோதரா? வேண்டாம், வேண்டாம்! எங்கள் உடைமையான தங்கத்தைப் பறித்துச் செல்லாதே. விபரீதம்தான் விளையும், வைத்துவிடு" என்று கத்தினார்கள்.

விகாரமாகச் சிரித்தான் குள்ளன்.

"இனி உலகம் எனக்குச் சொந்தம்" 'கெக் கெக்' என்று சிரித்துக்கொண்டே பாறைகளின் மீதாகத் தாவித் தாவி ஓடலானான். அவனைத் தடுத்து நிறுத்தவோ தட்டிப் பறிக்கவோ திராணியற்ற கன்னிகள் பரிதாபமாக நீரிலே நின்று கொண்டிருந்தார்கள்!

(தொடரும்)

# புண்ணியம்

சிற்றெறும்புக் கூட்டமொன்று மெல்லமெல்லவே — அரிசி
சேகரித்துச் சேகரித்துக் கொண்டுசெல்லுதே!
புற்றுக்குள்ளே பூட்டிவைத்த உணவினையெல்லாம் — மழை
பெய்யும்போது மகிழ்ச்சியோடு உண்டுவாழுதே!

தேனீகூடத் தினந்தினமும் தேனைச்சேர்த்திடும் — பின்னர்
தேவையென்று வந்தபோது எடுத்துஉண்டிடும்!
மானிடரும் பணத்தைக்கொண்டு வங்கியில்போட்டு — ஒரு
தேவையென்றால் வாங்கிடுவார் திரும்பவும் கேட்டு

புண்ணியமும் பணத்துடனே போடுதல் வேண்டும் — அந்தப்
புண்ணியத்தைப் போடும்வங்கி ஏழையின்வயிறு.
பண்ணிவைத்த தருமமெல்லாம் கெடுதல்கள்வந்தால் — நம்மைப்
பரிவுடனே பாதுகாக்கும் வங்கிப்பணம்போல்!

— கு. கிருஷ்ணன்







# ஒட்டகம்

வந்து பாரு ஒட்டகம் — அதன்
வளைந்த முதுகில் பெட்டகம்
முந்தி வந்து பாரு — அதன்
முதுகின் மேலே ஏறு

உருவம் பெரிய உருவம் — அது
உண்பதுவோ சைவம்
பொறுமையான மிருகம் — என்ற
பெருமை பெற்ற மிருகம்

பாலை வனத்துக் கப்பல் — என்று
பலரும் சொல்வ துண்டு
காலம் பார்த்து நமக்கு — அது
கடமை புரிவ துண்டு.

— மோரூர் முல்லை வளவன்



# குட்டிப்பாப்பா

சின்னச்சின்ன மொட்டுஒன்று
எங்கள்வீட்டில் மலர்ந்ததாம்—அது
என்னையென்னைப் பார்த்துப்பார்த்து
குஞ்சக்காலை விசிறுதாம்.

'இங்குஇங்கு' என்றுசொல்லிக்
காற்றையே துழாவுதாம் — அது
எங்கிருந்து வந்தோமென்று
இங்குமங்கும் பார்க்குதாம்.

கிட்டமுகம் கொண்டுபோனால்
பாலின்மணம் வீசுதாம் — அது
கொட்டுக்கொட்டுப் பார்வையாலே
ஏதேதோ பேசுதாம்.

குட்டிப்பாப்பா என்றுசொல்லிக்
கொஞ்சமனம் தோணுதாம்—அதன்
பட்டுக்கையைத் தொட்டுவிட்டால்
பரவசமே யாகுதாம்.

—விஜயராமன்



# ராணி துர்க்காவதி

கௌசிகன்




மொகலாயர் ஆட்சி பாரதத்தில் வேரூன்றிவிட்டது. வளப்பமான பூமியிலே தளதளவென்று செழிப்பாக வளர்ந்து மதர்த்து நிற்கும் பசுமரத்தின் நிலையில் இருந்தது அந்நியர்களின் ஆட்சி. வெப்பம் விழும் இடங்களுக்கெல்லாம் தனது நீண்ட கிளைகளைப் பரப்பி விழுதுவிடச் செய்யும் ஆலமரத்தைப் போன்று தனது செல்வாக்கை நாலா திசைகளிலும் நிலைநாட்டி மொகலாய சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தும் வெறியில் இருந்தார் ஆலம்பனு அக்பர்.

இதே நேரத்தில் பாரதத் தாயின் புதல்வர்களிடையேயும் ஒரு புதிய விழிப்பு ஏற்பட்டிருந்தது. நம் வீட்டில் புகுந்து நம்மையே ஆதிக்கம் செலுத்தும் அந்நியர்களை விரட்டி அடிக்க வேண்டும் என்ற ஆவேசம்தான் அது. ஆனால் அந்த ஆவேசத்தை, அரச பரம்பரையினரிடையே ஆயிரம் பூசல்களைக் கிளப்பிவிட்டு அணைத்துக் கொண்டிருந்தனர் அந்நியர்கள். தங்களுள் ஒற்றுமை வேண்டும் என்பதை மறந்து மகிமை இழந்து உரிமையைப் பறிகொடுத்துக் கொண்டிருந்தார்கள், பாரதமன்னர்கள். ஆனாலும் அணைக்கும் நீரே ஒருசிலசமயங்களை அதிகமாகக் கனன்று ஜ்வலிக்கச் செய்வதுபோல் ராஜபுத்திரர்களில் சிலர் அடிமைத் தளையில் அகப்படாமல் ஆர்ப்பாட்டம் செய்தனர். அத்தகையோரை அடக்கி ஒடுக்குவதிலே கவனம் செலுத்தலானார் அக்பர். திறமை மிக்க தளபதிகளை நாலா திசைகளிலும் அனுப்பினார். அத்தகைய தளகர்த்தர்களிலே ஒருவர்தான் ஆஸப்கான். பன்னு நாட்டு ராஜா ராம்சந்தர் மீது படையெடுத்து வெற்றி வாகை சூடிய சூட்டோடு கோண்ட்வானுவின் மீது படையெடுத்துச் செல்லும்படி ஆஸப்கானுக்கு ஆணை பிறப்பித்தார் அக்பர்.

கோண்ட்வானு என்பது பரந்த தொரு ராஜ்யம். சாந்தலர்களின் வழித்தோன்றலான துர்க்காவதி என்ற பெண்ணரசியே இந்த ராஜ்யத்தை ஆண்டு வந்தாள். கணவனை இழந்த







காரிகை ஆனாலும் கடமை மறவாத கற்பரசி. தன் அருமை மைந்தன் வீர நாராயணனின் பிரதிநிதியாகத் தன் நாட்டை ஆண்டு வந்தாள். அவனை வாழ்விப்பதற்காகவே கணவனுடன் உடன்கட்டை ஏறாமல் உயிர் வாழ்ந்து வரும் உத்தமி துர்க்காவதி. பெண்கள் என்றால் அந்தப்புரத்தை அழகு செய்யும் பிறவிகள் என்ற எண்ணத்தை மாற்றி அமைத்த மகாராணியாக விளங்கினாள் துர்க்காவதி. அரசியலை அற்புதமாக அறம் வழுவாது நடத்திக் காட்டினாள். மக்களை அன்பால் அடிமை கொண்டாள். குடிமக்களின் சுக வாழ்வே தன் மூச்சாக எண்ணி வாழ்ந்து வந்த மாதரசி துர்க்காவதி. இருபதினாயிரம் குதிரை வீரர்களையும் ஆயிரம் யானைகளையும் கொண்ட படை இருந்தது கோண்ட்வானாவின் ராணியிடம். படைகளைத் தானே நடத்திச் செல்லும் துணிவும் ஆற்றலும் தகுதியும் கொண்டிருந்தாள் அந்த ராணி. போர்க் கலையில் வல்லவளான ராணி துர்க்காவதி குறிபார்த்துச் சுடுவதிலும் அம்பு எய்வதிலும் அதிக சாமர்த்தியம் உடையவளாக விளங்கினாள். வேட்டையாடுவதில் விருப்பம் கொண்டவளான இப்பெண் புலி, நிஜமான புலியைக் காண நேர்ந்து விட்டால் அதைக் கட்டுக் கொல்லும் வரை தண்ணீர்கூட அருந்த மாட்டாள்.

கோண்ட்வானாவின் அண்டை நாட்டில் ஆதிக்கம் செலுத்தி வந்த அக்பரின்



பிரதிநிதி ஆஸப்கான், ராணி துர்க்காவதியைப் பணிய வைக்கப் பலவாறு முயன்றான். முடியவில்லை. அக்பரின் கீழ் அடிமை வாழ்வு வாழ விரும்பவில்லை அரசி துர்க்காவதி. ஷா-யன்ஷா அக்பருக்கோ செல்வம் கொழிக்கும் அந்தச் சீமையைச் சுதந்திரமாக விட்டு வைக்க மனமில்லை. கோண்ட்வானாவின் அரண்மனையில் பரம்பரை பரம்பரையாகச் சேமித்து வைக்கப்பட்டிருந்த செல்வக் குவியலைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தார் அக்பர். அது மட்டுமா? எழுபதினாயிரம் கிராமங்களைக் கொண்ட கோண்ட்வானா மொகலாய ஆட்சிக்கு உட்படுமானால்? ஆசையை வளர்த்துக் கொண்ட அக்பர் தமது படை பலத்தால் கோண்ட்வானாவைத் தம் வசமாக்கிக் கொள்வது என்று முடிவு செய்தார்.

அக்பரின் படைகள் ஆஸப்கானின் தலைமையில் கோண்ட்வானாவைத் தாக்க முற்பட்டன. பத்தாயிரம் குதிரை வீரர்களும் ஏராளமான காலாட்படைகளும் ராணி துர்க்காவதியின் சுதந்திரத்தைப் பறிக்கக் கிளம்பினர். ராணியின் அண்டை அயல் நாட்டுச் சிற்றரசர்கள் மொகலாயரின் படை பலம் கண்டு ராணியைத் தனியே விட்டு மொகலாயரின் பக்கம் சேர்ந்துகொண்டார்கள். இதனால் ஆஸப்கானின் படை பலம் இன்னும் பெருகியது.

தன்னை நோக்கிப் புயலெனச் சீறி வரும் அபாயத்தை உணர்ந்தும் ராணி கலங்கவில்லை. தைரியத்தை இழக்கவில்லை. தம் வீரர்களை ஒன்று திரட்டினாள். ஆனால் அந்தோ! அந்தப் பெண்ணரசிக்கு இருந்த தேச பக்தியும் வீரமும் ஆண் மக்களுக்கு இல்லையே. வரவிருக்கும் அபாயத்தைக் கண்டு அஞ்சிய பலர் தங்கள் குடும்பங்களைக் காக்க ராணுவத்தைத் துறந்து போய்விட்டார்கள். துர்க்காவதியின் படையிலே இப்போது ஐயாயிரம் வீரர்களே மிஞ்சி இருந்தார்கள். ஆஸப்கானின் கடலன்ன சேனையை இந்த ஐயாயிரம் போர் வீரர்களைக் கொண்டு சமாளித்தாக வேண்டும். இந்த நிலையிலும் மனம் கலங்கினாள் இல்லை அம்மாதரசி. வெற்றி அல்லது வீர மரணம் என்ற மன உறுதியோடு தானே போர்த் தலைமை பூண்டாள். முன்னேறி வரும் மொகலாயப் படை வெள்ளத்துக்கு வழிவிட்டுப் பத்திரமான இடத்தை நாடிப் பின்வாங்கினாள். கார்ஹி மாகாணத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள நார்ஹி என்ற இடத்தில் வியூகம் அமைத்துக் கொண்டு எதிர்க்கலானாள். இரண்டு நாட்கள்தான் மொகலாயப் படைகளை எதிர்த்து நிற்க முடிந்தது. அதுவே துர்க்காவதி போன்ற வீர மகளினால்தான் முடியக்கூடிய காரியம்.

மூன்றாவது நாள், அந்நியனுக்குப் பணிய மறுத்த அந்த அரசி தம் படை பலத்தைக் கணக்கிட்ட போது, இறந்து பட்டவர்கள் போக எஞ்சி இருந்தோர் இரண்டாயிரம் பேர்களே என்பதை அறிந்து கண்களில் நீர் திரண்டது. அது பயத்தினால் அல்ல. தம் வீரர்களில் மூவாயிரம் பேர்களை இழக்கும்படியாயிற்றே என்ற வேதனையினால்தான். எதிர்ப்பைக் கைவிடுமாறு கூறிய மந்திரிகளின் யோசனைகளைச் சிரிப்பால் உதறிவிட்டுச் சிங்கமெனச் சீறி எழுந்தாள், அந்த மங்கை. முடிவு நிச்சயம் என்று அறிந்திருந்தும் உயிரைத் துரும்பாக மதித்துக் கடைசி வரை மொகலாயரை எதிர்த்தே தீருவேன் என்று சூளுரைத்தாள் துர்க்காவதி.

பயம் என்பதையே அறியாத சாந்தல குல மாணிக்கம், நார்ஹியிலிருந்து பின் வாங்கி 'சுதா' என்ற கானகத்தினுள் தனது சிறு படையுடன் புகுந்தாள். அந்தக் கானகம் மலைகளால் சூழப்பட்ட ஒரு பகுதி. அதன் ஒரு பக்கத்தில் 'கார்' என்ற நதியும் மறுபக்கம் நர்மதையும் ஓடின. இதனுள் நுழைய ஒரே ஒரு கணவாய் வழியே உண்டு. இதற்குக் குறுகலானதோர் மலைப் பகுதி வழியேதான் போக வேண்டும். இந்த இடத்தில் இருந்தபடி முன்னேறிவரும் மொகலாயப் படைகளைத் தாக்கிச் சமாளிப்பதென்று முடிவு செய்தாள் துர்க்காவதி. அவள் வீரத்துக்குப் பரிசாக, அஞ்சா நெஞ்சத்தின் அடையாளமாக ஆஸப்கானின் வீரர்களில் முன்னூறு பேர் மாண்டார்கள். மொகலாயர் பீதி அடைந்து பின்வாங்கினர். இந்த வெற்றியின் சூட்டோடு சூடாக அன்று இரவே மொகலாயப் படைகளின் மீது திடீர்த் தாக்குதல் நடத்தி வெற்றியை உறுதிப்படுத்தி, கோண்ட்வானாவை விட்டே அந்நியர்களை விரட்டி அடிக்க வேண்டும் என்று துடித்தாள் துர்க்காவதி. மறு நாள் காலையில் ஆஸப்கான் தனது பீரங்கிப் படையைக் கொண்டு கணவாய் வழியை அடைத்துத் தனக்குக் கதியே இல்லாமல் செய்துவிடுவான் என்று அவளுக்குத் தெரியும். ஆனால் அந்தப் பெண்ணரசிக்கு இருந்த துணிவும் தைரியமும் அவளது தளபதிகளுக்கு இல்லை. இரவில் நடத்தும் திடீர்த் தாக்குதல்களுக்கு அவர்கள் ஒத்து வரவில்லை. ஆகவே.....

மறு நாள் காலை துர்க்காவதி எதிர்பார்த்தபடியேதான் நடந்தது. ஆஸப்கான் தனது பீரங்கிப் படையை முன்

னால் நிறுத்திக் கணவாயைக் கடந்து முன்னேறலானான். அளவைக் கக்கிக் கர்ஜிக்கும் அதன் முன்னால் துர்க்காவதியின் சின்னஞ் சிறிய படை எம்மாத்திரம்? ஆனால் இந்த அசுரத் தாக்குதலையும் அலட்சியமாக எதிர்த்து நின்றாள் ராணி. பட்டத்து யானையின் மீது அமர்ந்தபடி பயமறியாத தன் வீரர்களை ஊக்கி உற்சாகமூட்டிக் கொண்டிருந்தாள். அவளது மகன் வீர நாராயணன் வயதில் சிறியவனானாலும் அன்னையின் அருகே ஒரு குதிரை மீது அமர்ந்தபடி போர்க்களத்திலே சிறுத்தையாக விளையாடிக் கொண்டிருந்தான், விரோதிகளின் வாளோடும் உடலோடும்! மொகலாயர்களின் தாக்குதலைத் தாயும் தனயனும் இரண்டு தடவை சமாளித்துப் பின்வாங்கச் செய்தார்கள். அந்தச் சூழ்நிலையில் அவர்களுக்கிருந்த படைபலத்தில் அது மகத்தான சாதனையாயிற்றே. மூன்றாவது முறை மூர்க்கமாகத் தாக்கினார்கள் மொகலாயர்கள். இளவரசன் படுகாயம் அடைந்தான். உடனே அவனை இரு வீரர்கள் பத்திரமான இடத்துக்குத் தூக்கிக் கொண்டு விரைந்தார்கள். ராணி மட்டும் யானை மீது அமர்ந்தபடி தன்னந் தனியே துர்க்கையைப் போலப் போராடிக் கொண்டிருந்தாள். இப்போது அவள் படையில் முன்னூறு வீரர்களே இருந்தார்கள். இந்த நிலையிலும் கலங்காத துர்க்காவதி மொகலாயர்களைக் கலங்கடித்துக் கொண்டிருந்தாள். அப்போது....

இரண்டு அம்புகள் அந்த மாதர்குல மாணிக்கத்தை நோக்கிப் பறந்து வந்தன. ஒன்று அவளது வலது நெற்றிப் பொட்டிலும் மற்றொன்று கழுத்திலும் பாய்ந்து நின்றன. இப்படி உடலில் ஊடுருவி நின்ற அந்த இரு அம்புகளையும் தம் கைகளாலேயே பிடுங்கி எறிந்தாள். குருதி கொப்பளித்து வழிந்தது. அப்படியே யானை மீது மயக்கமுற்றுச் சாய்ந்தாள். ராணி துர்க்காவதியா விழுந்தாள்? இல்லை பாரதத்தின் சுதந்திர தேவியேதான் அப்படி மயங்கி விழுந்தாள். கலங்காத உள்ளமும் களங்கமில்லா வீரமும் சாகஸமும் நிறைந்த ராணி துர்க்காவதி மயக்கம் தெளிந்து மறுபடி கண் விழித்தபோது போர்க்களத்தின் நிலைமை முற்றிலும் மாறி இருப்பதை உணர்ந்தாள். வெற்றி விரோதிகளின் பக்கம் வேசாரிப் போனதைக் கண்டு அவள் வீர உடல் துடித்தது. வெற்றி வெறி கொண்ட மொகலாய வீரர்களின் குதூகலமான கூச்சல் நாராசமாக அவள் காதுகளில் ஒலித்தது. தோல்வியைச் சுமந்தபடி உயிர் வாழ விரும்பவில்லை அந்த உத்தமி. அந்நியர்களின் முன்னே கைதியாகித் தலை குனிந்து நிற்கும் அந்தக் காட்சியை நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை அவளால். இடையில் செருகி இருந்த குத்துவாளை எடுத்தாள் சரேலெனத் தன் இதயத்திலே பாய்ச்சிக் கொண்டுவிட்டாள். நினைவு இழந்துவிட்ட மகாராணியை மொகலாயர்களின் கையில் சிக்க விடாதபடி போர்க்களத்திலிருந்து வெகு தூரம் யானையை விரட்டியபடி கொண்டு வந்திருந்தான் மாவுத்தன். அத்தனை கஷ்டப்பட்டும், மகாராணியைக் காப்பாற்ற முடியவில்லை அவனால். அவன் தடுப்பதற்குள் குத்துவாள் அந்தக் குலவதியின் உயிரைக் குடித்துவிட்டது. நாட்டின் மானம் காக்கப் போராடி உயிர்த் தியாகம் செய்த உத்தமிகளில் ராணி துர்க்காவதியின் வரலாறு ஒப்புயர்வற்றது.

(அடுத்த இதழில்:
இஸபெல் - ஓர் இளந்தளிர்)

---

## விழிநாதர்


மகாவிஷ்ணு இழந்த சக்கரத்தைப் பெறுவதற்காக திருவீழிமிழலைக் கோவிலில் வாழும் சிவனுக்குப் பூஜை செய்ய விஷ்ணுபுரத்தில் தங்கினார். அவர் ஸ்நானம் செய்வதற்காகக் காவிரியும் கங்கையும் அவர் கூப்பிட்டதற்காக இணைந்து ஓடிவந்து 'ஹரிசொல் ஆறு' என்று பெயர் பெற்றது. தினம் தினம் அர்ச்சனைக்கென்று 1008 தாமரைப் பூக்களைப் பறித்துச் சென்று பூஜை நடக்கும். விஷ்ணுவைச் சோதிக்க நினைத்த சிவன் ஒருநாள் ஒரு பூவைக் குறைத்து விட்டார். இதைச் சோதனை என்று புரிந்துகொண்ட விஷ்ணு தாமரைப் பூவைக் காட்டிலும் மேலான தம் பத்ம நயனங்களையே எடுத்து அர்ச்சித்தார். சிவனும் காட்சி கொடுத்து சக்கரத்தைத் திரும்பக் கொடுத்தார். நேத்ரார்ப்பணேசுவரர் என்ற அவருடைய நாமத்தை (இக்கதையையும்) உண்மையெனக் காட்ட அவர் பாதத்தில் இன்றும் நேத்ரம் (கண்) இருக்கிறது. காத்யாயினி தேவியுடன் ரிஷபாரூடராய்க் கல்யாணக் கோலத்தோடு கண்கொள்ளாக் காட்சியளிக்கிறார். திருவீழிமிழலைக் கோவிலோடு பக்கத்தில் இருக்கும் எங்கள் ஊரும் புராணக் கதையில் இணைந்து வருகிறது.

— எம். உமா, வயது பதினொன்று, ஏழாம் வகுப்பு

# நந்து சுந்து மந்து ⑩

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்






விளக்கிலிருந்து மண்ணெண்ணெய் சிதறித் தீப் பிடிக்க, தீயைக் கண்டு பயந்த மந்து மேஜை மீது தாவ, நடக்க முடியாத பெண் தடுமாறி விழுந்து மூர்ச்சையாகிறாள்.
சீக்கிரம் கண்ணை முழிச்சுக்கோம்மா... நெருப்பு வேக மாப் பரவிண்டிருக்கே.
அப்படித்தான்... மெதுவா நகர்ந்து வா. ஆ! இன்னும் கொஞ்சம்... வெளியே வந்துடு.
ஜன்னல் வழியா அந்தக் குழாயை நீட்டு. அதிலிருந்து தண்ணீர் பீச்சி அடிக்கும். நெருப்பு அணையும்.
ஆச்சரியமா இருக்கே... ...எங்கே, நீ குழாயைத் திறந்து விடு, நான் ஜன்னல் பக்கம் போறேன்.
ஆமா! இந்தக் குழாய் வழியாத் தண்ணீர் என்னமாப் பீச்சி அடிக்கறது புஸ்...ஸ்..! நெருப்பை அணைக்கறதுக்கு எத்தனை சுலபமான வழி?
மந்துவைத் தேடி வந்த நந்துவும் சந்துவும்...
ஏய், என்னடா பண்றே இங்கே? ஒரே நெருப்பும் புகையும் கரியும் இதெல்லாம் உன் வேலை தானே?
மந்துவாலே தான் இப்போ இந்த வீடு சாம்பலாகாமே தப்பி இருக்கு மாமா.
தொடரும்



வாழ்க்கையில் சுயமாக வளம் பெறும் ஆடவர் ஒருவர்...
...அதற்குத் துணை செய்ய அழகான ஆடைகளையும் அணிகிறார்!
MAFATLAL GROUP
நிச்சயமாக, மஃபத்லால் க்ரூப் அளிப்பவை நேர்த்தியான துணிமணிகள்தான்!




**இவை என்ன?** நீங்கள் அன்றாடம் காணும் பொருள்கள் இங்கு மாறுபட்ட கோணங்களில் தோற்றமளிக்கின்றன. இவை என்னென்ன என்று கூறமுடியுமா?

விடை 22ம் பக்கம் பார்க்க





# காளானிலே கண்ட மருந்து

கௌசிகன்

நமது ரத்தத்தின் ஒரு பகுதி வெள்ளை அணுக்களால் (கார்ப்பஸல்ஸ்) ஆனது என்று உங்களுக்குத் தெரியும். இவை ரத்தத்தினுள்ளே புகும் கிருமிகளோடு போராடி நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு வகை செய்கிறது. சில வேளைகளில் கிருமிகளுக்கும் வெள்ளை அணுக்களுக்கும் நிகழும் போரில்; கிருமிகளின் தாக்குதலைச் சமாளிக்க முடியாத நிலையில் வெள்ளை அணுக்கள் தோல்வி அடைந்து கிருமிகள் பல்கிப் பெருகுவதனால் ரத்தம் கெடுகிறது.

இப்படிப் பரவும் தொற்றுநோய்க் கிருமிகளை அழிக்க முடியாவிடில் நோயாளி இறந்தே போவான்.

ஆண்டிஸெப்டிக் எனப்படும் கிருமி நாசினிக்குக் கிருமிகளைக் கொல்லும் வல்லமை உண்டு. ஆனால் அதே வேளையில் இவை வெள்ளை அணுக்களையுமே நாசமாக்கக் கூடியவை. ஆகவே இவைகளை உட்கொள்ளுவதால் அபாயமாகும்.

1914ம் ஆண்டில் பிரான்ஸ் தேசத்தில் காயமடைந்த போர் வீரர்களுக்குச் சிகிச்சையளிப்பதில் ஈடுபட்டிருந்தார் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஒரு வாலிப டாக்டர். அவர் பெயர் **அலெக்ஸாண்டார் ஃப்ளமிங்** ஏராளமான போர் வீரர்கள் ரத்தம் கெட்டுப் போன காரணத்தினால் மரணம் அடைந்த பரிதாபத்தைக் கண்டு வருந்தினார்.

துப்பாக்கிக் குண்டுகளும், குண்டுகள் வெடிக்கும் போது அதிலிருந்து சிதறும் உலோகத் துண்டுகளும் போர் வீரர்களின் உடலைத் தாக்கும்போது முதலில் அவர்கள் அணிந்துள்ள உடைகளைத் துளைத்த பிறகே உடலுக்குள் புகுந்தன. இந் நிலையில் துணிகளின் துண்டுகள் காயத்தினுள் செல்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம். வீரர்களின் உடைகளோ பேராபத்தை விளைவிக்கக் கூடிய கிருமிகளின் இருப்பிடமாக விளங்கின. எப்படி? போர்க்களங்களில் கண்ட கண்ட இடங்களில் கீழே விழுந்தும் உருண்டும் புரண்டும் தவழ்ந்தும், ஓடியும் குதித்தும் முன்னேறும் போது உடைகளில் புழுதியும் சகதியும் படியுமே. அவற்றிலே எத்தனை எத்தனை கிருமிகளோ? இந்த ஆடை குண்டுகளால் துளைக்கப்பட்டு அதன் துண்டுகள் உடலுக்குள் புகும் போது கொடிய கிருமிகளும்தானே உள்ளே போகும்?

போர்வீரர்களின் ரத்தம் விஷமாகி விபரீதமான நிலையில் மரணமடைவதற்கான காரணத்தை ஃப்ளமிங் அறிந்தார். ஆனால் அதைத் தடுத்துக் குணப்படுத்துவதற்கான மார்க்கம் தெரியவில்லை. வெள்ளை அணுக்களைப் பாதிக்காதவகையில் வியாதிக் கிருமிகளை மட்டும் கொல்லக்கூடிய ஒரு மருந்து கண்டுபிடிக்கப் படுமானால் பல உயிர்களைக் காப்பாற்றலாம் என்று எண்ணினார்.

முதல் மகாயுத்தத்தின் முடிவுக்குப் பிறகு ஃப்ளமிங் லண்டனில் உள்ள ஸெயிண்ட் மேரி ஹாஸ்பிடலின் மருத்துவப் பள்ளியில் கிருமி இயல் (பாக்டீரியாலஜி) பற்றி விரிவுரைகளை நிகழ்த்தி வந்தார். பல்வேறு நோய்களுக்குக் காரணமான கிருமிகளைப் பற்றிய விளக்கங்கள் இவை.

1922ம் ஆண்டில் ஒரு நாள். ஃப்ளமிங்குக்குக் கடுமையான ஜலதோஷம். ஏதோ தோன்றியது. தம் மூக்கிலிருந்து வெளிப்படும் சளியைச் சூட்சும தரிசினி மூலம் சோதிக்க எண்ணினார். சோதித்த போது அவருக்கு ஆச்சரியமான ஆச்சரியம்! மூக்குச் சளிக்குக் கிருமிகளைக் கொல்லும் சக்தி இருப்பதைக் கண்டார் அவர். ஃப்ளமிங் தமது ஆராய்ச்சியைத் தொடர்ந்தார். மூக்குச் சளியில் கண்ட அதே தன்மை கிருமிகளைக் கொல்லும் சக்தி — கண்ணீர், உமிழ்நீர் ஆகியவற்றிலும் இருப்பது தெரிந்தது. ஆகவே, சளி, கண்ணீர், உமிழ் நீர்



ஆகியவற்றில் கிருமிகளை அழிக்கும் ஒரு வகைப் பொருள் இருக்கிறதென்பதை உறுதிப்படுத்திக் கொண்டார். இதை லியோஸ்மே (*Lysozyme*) என்று அழைத்தார் ஃப்ளமிங். கண், மூக்கு, தொண்டை ஆகியவற்றைத் தாக்கும் கிருமிகளோடு போராட இயற்கையே இத்தடுப்புப் பொருளைக் கண்ணீர், சளி, உமிழ் நீர் இவற்றில் கலந்திருக்கிறது.

ஆனால் ஃப்ளமிங்கின் இந்தக் கண்டு பிடிப்பு உடனே எவ்வித விசேஷ பலனையும் தந்துவிடவில்லை. வெள்ளை அணுக்களைக் கொல்லாத; கிருமிகளை மட்டும் அழிக்கக் கூடிய ஒரு பொருள் இருக்கிறது என்ற உண்மை தெரிந்தது. இதே சக்தியை உடைய வேறு பொருள்களும் உலகில் இருக்கலாம். என்ற நம்பிக்கை ஃப்ளமிங்குக்கு ஏற்பட்டது. 'ப்ளட் பாய்ஸனிங்' எனப்படும் ரத்தம் கெட்டுப் போய் மரணம் சம்பவிக்கும் நிலையிலிருந்து மனித உயிர்களைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது.

இதற்கு ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, ஃப்ளமிங் லண்டன் சர்வகலாசாலையில் பாக்டீரியாலஜி புரொபஸராக இருந்தார். ஸெயிண்ட் மேரி ஆஸ்பத்திரியில் உள்ள தன்னுடைய சிறிய சோதனைச் சாலையில் ஆராய்ச்சிகளை நடத்தி வந்தார். சின்னச் சின்னக் கண்ணாடித் தட்டுக்களில் — இவைகளுக்குக் கல்ச்சர் பிளேட்ஸ் என்று பெயர் — பலவிதமான கிருமிகளை உற்பத்தி செய்து வளர்த்து வந்தார்.. ஆராய்ச்சி செய்வதற்காக. முக்கியமாகக் கட்டிகள், பருக்கள் இவற்றை உண்டாக்கும் கிருமிகளை வளர்த்து வந்தார்.

ஆராய்ச்சிக்கு உரியதான இந்தத் தட்டுக்களைக் காற்றில் உள்ள வேறு கிருமிகள் தாக்காதவாறு மூடி வைக்க வேண்டிய பொறுப்பு ஒரு நர்ஸினுடையது. ஃப்ளமிங்கின் ஆராய்ச்சிகளுக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்ட நர்ஸ் அவர். கவனக் குறைவாக அவர் ஒரு தட்டை மூட மறந்து போனார். மறு நாள் ஃப்ளமிங் கிருமிகளின் வளர்ச்சியை ஆராய முற்பட்ட போது ஒரு தட்டின் மீது காளான் படிந்திருப்பதைக் கண்டார். நர்ஸின் கவனக் குறைவினால் ஏற்பட்ட இந்த நிலையை எண்ணி முதலில் ஃப்ளமிங்குக்குக் கோபமே வந்தது. ஆனால் பிறகு ஏதோ எண்ணியவராகக் காளான் மூடிய அந்தத் தட்டை ஆராய்ந்தபோது அவருக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. தட்டிலே மூடியிருந்த காளான்கள் அதிலிருந்த கிருமிகளை அழித்திருந்தன. கண்ணீரிலும் உமிழ் நீரிலும் இருக்கும் பொருளான லிஸோஸ்மே எந்தக் காரியத்தைச் செய்ததோ அதை இந்தக் காளான்கள் செய்திருப்பதைக் கண்டார் ஃப்ளமிங்.

காளான்கள் — மோல்டு (*Mould*)- என்பது என்ன? பழைய ரொட்டிகளின் மீதும், பாதுகாப்பில்லாத உணவுப் பொருள்கள் மீதும் பஞ்சு போன்ற ஒரு வகைப் பொருள் மூடிக் கொள்ளுமே அதுதான். இந்தக் காளான்களிலிருந்து தான் மனித உயிர்களைக் காக்கும் மகத்தான **பெனிஸிலின்** என்ற மருந்தைக் கண்டு பிடித்தார் அலக்ஸாண்டர் ஃப்ளமிங். காளான்களை ரோமானியர்கள் பெனிசிலியம் என்று அழைத்தார்கள். இதே வார்த்தையை நவீன மருத்துவ உலகும் ஏற்றுக் கொண்டது.

இன்றைய பெனிசிலின் புரியும் சாதனையைப் போன்ற ஒரு சிகிச்சை முறை புராதன எகிப்தியர்களுக்கும் ரோமானியர்களுக்கும் தெரிந்திருந்தது.

ஜோஸப் லிஸ்டர் என்ற விஞ்ஞானி காளான்களின் தன்மையை ஆராய்ந்து



**இவை என்ன ? — விடைகள் :** உங்களுக்குப் பழக்கமான நீங்கள் அடிக்கடி பார்க்கும் பொருள்கள்தான். ஆனால் கோணம் மாறி இருப்பதினால் கொஞ்சம் குழப்பம் அவ்வளவே : (1) பெரிய ஹோட்டல்களில் மேஜைமீது நாப்கின்களைச் (மடிமீது விரித்துக்கொள்ளும் துணி) சுருட்டி வைத்திருக்கிறார்கள், அதற்கான ஸ்டாண்டில். (2) பூச் செடிகளை வெட்டும் கத்திரி, பக்கவாட்டுப் பார்வையில். (3) 'லீக்புரூஃப்' பாட்டரியின் உச்சித் தோற்றம். (4) பூட்பாலிஷ் டப்பாவைத் திறக்க உதவும் அமைப்பு. (5) பிளாஸ்டிக் பக்கெட்டின் உயர்ந்த பிடியுடன் உச்சித் தோற்றம். (6) மக்கெட்டியின் உச்சித் தோற்றம். (7) பச்சை வாழைப்பழம் படுத்திருக்கிறது. (8) ஸ்குரு ஆணியேதான்.

ஒரு முடிவுக்கு வந்தார். ஆனால் அவர் அதைத் தொடர்ந்து ஆராயாததினால் பெனிஸிலினைக் கண்ட பெருமை அவருக்குக் கிடைக்காமல் போயிற்று.

தற்செயலாகக் கண்ட காளான்களின் சக்தியை ஃப்ளமிங் தொடர்ந்து ஆராய்ந்தார். பலன் திருப்தி அளிப்பதாக இருந்தது. காளான் தோன்றிய உணவுப் பொருளே கிருமிகளைக் கொல்லும் சக்தி படைத்ததாக இருப்பதைக் கண்டார். இந்தப் பொருள் வெள்ளை அணுக்களை அழிக்கிறதா என்று ஆராய்ந்தார். காளான் தோன்றிய திரவத்தை எலி மற்றும் வேறு பிராணிகளின் உடலில் செலுத்தினார். அவற்றின் ரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்கள் அழியவில்லை. ஃப்ளமிங் எதைத் தேடிக் கொண்டிருந்தாரோ அது கிடைத்துவிட்டது.

ஃப்ளமிங் கண்டு பிடித்த பெனிசிலின் மருந்தைப் பல நாள் வைத்திருந்து பயன்படுத்த முடியவில்லை. சில நாட்களானால் அது வீரியம் குறைந்து கிருமிகளைக் கொல்லும் சக்தியை இழந்தது. அன்றைய மருத்துவத் தேவைக்கு ஏற்றபடி பெனிஸிலினைத் தயாரிக்கும் முயற்சியில் சலிப்படைந்து அதைக் கைவிட்டார் ஃப்ளமிங். சில ஆண்டுகள் கழித்து ஆக்ஸ்போர்டைச் சேர்ந்த டாக்டர் ஈ. பி. செயின் என்பவரும் பேராசிரியர் ஹேவர்டு ஃப்ளோரேயும் பெனிசிலினைப் 'பௌடர்' உருவில் தயாரிப்பதில் வெற்றி கண்டார்கள். 1940 ஜூனில் ஐம்பது எலிகளின் உடலில் மிகக் கொடிய கிருமிகளைச் செலுத்தினார்கள், இஞ்செக்ஷன் மூலம். பவுடர் நிலையிலான பெனிஸிலினை இருபத்தைந்து எலிகளுக்கு இஞ்செக்ட் செய்தார்கள். பெனிசிலின் மருந்து செலுத்திய இருபத்தைந்து எலிகளில் ஒன்றைத் தவிர மற்றவையெல்லாம் பிழைத்தன. பெனிஸிலின் இஞ்செக்ஷன் செய்யப்படாத இருபத்தைந்து எலிகளும் மாண்டன. 1941ல் பவுடர் நிலையில் உள்ள பெனிஸிலின் மனிதர்களுக்குத் தரப்பட்டது. நல்ல பலன் கிடைத்தது.

இதற்குள் இரண்டாவது உலக யுத்தம் பெனிஸிலின் மருந்தின் தேவையை அதிகமாக்கியது. அதன் சேவை இன்றியமையாததாகி பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காத்தது. போர் வீரர்கள் பெனிஸிலினுக்குப் பெரிதும் கடமைப்பட்டவர்களானார்கள். அதிசய மருந்தைக் கண்டதற்காக ஃப்ளமிங்குக்கு நோபல் பரிசு கிடைத்தது. ஸ்பெயின் நாட்டில் காளையோடு சண்டையிடும் வீரர்கள் காளைகளின் கொம்புகளால் மரண காயம் அடைந்தோரையும் காப்பாற்றிய பெனிஸிலின் மருந்தைக் கண்டதற்காக ஃப்ளமிங்குக்கு ஒரு சிலையே எழுப்பியுள்ளார்கள்.

இன்றைய நவீன மருத்துவ மனைகளில் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து மருந்து கொடுப்பது டாக்டர்களானாலும் அவர்களைக் கவனமாகப் பராமரிப்பவர்கள் நர்ஸ்கள் தானே? நீண்ட நெடுங் காலமாகவே நோயாளிகளையும் குழந்தைகளையும் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள்பெண்கள் தாம். ஆதி மனிதன் உணவு தேடவோ, போரிடவோ வெளியே போகும்போது அவன் மனைவி வீட்டிலிருந்தபடி குழந்தைகளைக் கவனித்து வந்தாள். கணவன் காயமுற்றுத் திரும்பியபோது அவன் பழைய நிலைக்குத் திரும்பும் வரை அவனைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றவள் மனைவிதான். ஆதி நர்ஸ் தாயார்தான்.

நர்ஸ் எனப்படுபவர் எப்படி இருக்க வேண்டும். சம்ஸ்கிருத மொழியிலுள்ள நமது பழைமையான சாஸ்திரங்களில் நர்ஸ்களின் லட்சணம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது.

"ஒரு நோயாளியின் படுக்கையருகே இருந்து கவனிக்கக் கூடியவர் எப்படி இருக்க வேண்டும்? பொறுமைசாலியாகவும், இனிய சுபாவம் உடையவராயும் திடகாத்திரராகவும் நோயாளியின் தேவைகளை இன்முகத்தோடு கவனிப்பவராகவும் மருத்துவரின் கட்டளைகளைக் கூறாகவும் அப்பழுக்கில்லாமலும் நிறைவேற்றுபவராகவும் இருக்க வேண்டும்."

கிறிஸ்துவ உலகின் முதல் நர்ஸ் யார் தெரியுமா ? ரோமானியப் பிரபு

ஒருவரின் மகளான ஃபாபியோலா என்பவள்தான். கிறிஸ்து மதத்தை ஏற்ற அவள் தனது படாடோப வாழ்வை உதறிவிட்டு ஏழைகளுக்கும், நோயாளிகளுக்கும் உழைக்க தன் வாழ்வை அர்ப்பணித்தாள். கி.பி. 390ல் முதல் கிறிஸ்துவ மருத்துவச் சாலையை நிறுவினாள் ஃபாபியோலா. வீதிகளிலே நோயாலும், பசியாலும் வாடி விழுந்து கிடக்கும் மனிதர்களைத் தேடிப் போய் அழைத்து வந்து தம் ஆஸ்பத்திரியில் அவர்களுக்குப் பராமரிப்பளித்தார்.

பிற்காலத்தில் நர்ஸ்களின் தொழிலை, தம் வாழ்வை மதத்துக்காக அர்ப்பணித்துக் கொண்டவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். கிறிஸ்துவப் பாதிரியார்களும், கன்னிகா ஸ்திரீகளும் ஏழை எளியவர் நோயாளிகளுக்கு உண்ண உணவும், இருக்க இடமும், நோய்க்கு மருந்தும் அளித்துப் பாதுகாத்தனர். மத்திய காலத்தில் கிறிஸ்துவ சன்னியாசிகளும் கன்னிகா ஸ்திரீகளுமே உண்மையான நர்ஸ்களாக விளங்கினர். இன்றைய நர்ஸ்களுக்கான உடை அன்றைய கன்னிகா ஸ்திரீகள் உருவாக்கித் தந்ததே.

பதினாறும் நூற்றாண்டில் எட்டாம் ஹென்றி போப்பாண்டவருடன் சண்டையிட்டுக் கொண்டு கிறிஸ்துவ சந்நியாசிகளையும் கன்னிகா ஸ்திரீகளையும் மடாலயங்களிலிருந்து வெளியேற்றினார். அதன் பிறகு முன்னூறு ஆண்டுகளுக்கு இங்கிலாந்தில் நோயாளிகளைக் கவனிக்க முறையான அமைப்புக்கள் ஏதும் ஏற்படவில்லை. ஆஸ்பத்திரிகள் ஏற்பட்டன. ஆனால் முறையாகப் பயிற்சி அளிக்கப்பட்ட நர்ஸ்கள் கிடையாது. வைத்தியசாலைகள் அழுக்கும் அசுத்தமும் கூட்டமும் நிறைந்த இடமாக இருந்தன. கௌரவமான பெண்கள் அங்கு பணியாற்றச் செல்ல மாட்டார்கள். நர்ஸ் தொழில் மோசமான பெண்களின் பொறுப்பில் விடப்பட்டது. படிப்போ, உயர் குடிப் பிறப்போ ஒழுக்கமோ இல்லாத பெண்களின் கையில் பிணியாளர்களைப் பராமரிக்கும் மகத்தான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ஊதியமோ மிகக் குறைவு.

மற்ற ஐரோப்பிய நாடுகளிலே கிறிஸ்துவ மடாலயங்கள் நடத்திய வைத்தியசாலைகள் சிறப்பான பணியாற்றி வந்தன. ஆனாலும் அங்கும் நர்ஸ்களின் தேவை அதிகமாக இருந்தது. 1836ல் ஜெர்மனியைச் சேர்ந்த தியோடார்ப்ளீட்னர் (*Theodor Fliedner*) என்பவரும் அவர் மனைவியும் கெய்ஸர்வெர்த் என்னுமிடத்தில் ஒரு வைத்திய சாலையை நிறுவி கௌரவம் உள்ள பெண்களுக்கு அங்கு நர்ஸ் வேலைக்குப் பயிற்சி அளித்தார்கள். இதுவே முதலாவதான முறையாக நர்ஸ்களுக்கான பயிற்சியளிக்கப்பட்ட பள்ளி.

புகழ்பெற்ற பிளாரன்ஸ் நைட்டிங்கேல் 1849ல் இங்கு வந்து ப்ளீட்னர்களிடமிருந்து நிறைய விஷயங்களைத் தெரிந்து கொண்டு திரும்பினார். நவீன நர்ஸிங் முறையின் ஸ்தாபகராகப் போற்றப் படும் நைட்டிங்கேலின் வாழ்க்கை பற்றி விரிவாகக் கோகுலத்தில் வெளியாகியுள்ளது. மருத்துவத் துறையின் மகத்தான சேவைக்கும், புதிய புதிய மருந்துகளும் சிகிச்சை முறைகளும் தோன்றுவதற்கும் நர்ஸ்களின் பணி மறக்க முடியாத ஒன்றாகும். நோயாளி மருந்துகளினால் உடல் நலம் பெற்றாலும் உள்ளத்தாலும் நலம் பெற்றவர்களாக அவர்களை உருவாக்கி அனுப்பி வைப்பது நர்ஸ்களின் இன்முகமான சேவைதானே ?

**(முற்றும்)**





ராட்சத மிருகங்கள் - 10

# பறக்கும் ரெப்டைல்கள்

கிருஷ்ணவேணி

ஆதி ஊர்வனவற்றின் வழித் தோன்றல்களில் சில கடல்களில் வாழ்ந்தது போலவே வேறு சில ஆகாயத்திலே சஞ்சரித்தன. இவைகளை **டெரோசார்ஸ்** *(Pterosaurs)* என்று அழைத்தார்கள். டெரோசார் என்றால் இறக்கையுடைய பல்லி என்று பொருள். டெரோசார்களின் இறக்கைகள், இன்றைய வௌவால்களினுடையதைப் போலத் தோலினால் ஆக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கையிலும் ஒரு நீண்ட விரல் இருந்தது. இறக்கையின் முன் பக்கம் இந்த விரலோடு இணைக்கப்பட்டிருந்தது.

டெரோசார்களில் பலவிதங்கள் இருந்தன. இவற்றுக்கு மற்றொரு பெயர் **டெரோடாக்டில்ஸ்** *(Pterodactyls)* இதற்கு இறகோடு கூடிய விரல் *(Wing Finger)* என்று பொருள்.

டெரோசார்களில் சில மிகப் பெரிய உருவில் இருந்தன. இறக்கைகளை விரித்த நிலையில் அவற்றின் நீளம் முப்பது அடிகள். சிறிய இனங்களும் ஏராளமாக வாழ்ந்தன.. இன்றைய ஊர்க் குருவி அளவில்கூட டெரோசார்கள் இருந்திருக்கின்றன.

புராதன பறக்கும் ரெப்டைல்களில் ஒன்றின் பெயர் விநோதமானது. **ராம்ஃபோரிங்கஸ்** *(Rhamphorhynchus)* என்பது. நாடோடிக் கதைகளில் வரும் பெயர் போல் இருக்கிறதில்லையா? இது ஒன்றரை அடி நீளமே இருந்தது. இறக்கைகளின் நீளம் நான்கு அடிகள். இந்தப் பறக்கும் ரெப்டைலின் விசித்திரமான அம்சம் இதன் நீண்ட மெல்லிய வால்தான். இலையைப் போன்ற வடிவில் இந்த வாலின் நுனி முடிவடைந்திருக்கும். இது பறக்கும் போது திசையை மாற்ற உதவும் சுக்கானாகப் பயன்பட்டதோ என்னவோ !

ராம்ஃபோரிங்கஸ் பூமியில் தங்குவதே இல்லை. மரங்களின் கிளை, அடிமரம் இவைகளைப் பற்றிக் கொண்டு தொங்கும். சில வேளைகளில் வௌவால்களைப் போல் தலை கீழாகவும் தொங்குவது உண்டு. மரங்களின் மீது சுலபமாக ஏறக்கூடியது. இறக்கையின் முன்னால் இதற்கு வசதியாக விரல்களில் கொக்கி போன்ற நகங்கள் அமைந்திருந்தன. இறக்கையின் தோல் நான்காவது விரலோடு இணைந்திருக்க மற்ற மூன்று விரல்கள் பற்றிக் கொள்ள வசதியாகச் சுயேச்சையாக இருந்தன.

ராம்ஃபோரிங்கஸுக்குக் கூர்மையான பற்கள் இருந்தன. இவை முன்னோக்கி நீண்டிருந்தன. பின்னோக்கி வளைந்தபடி இருந்திருக்குமானால், பறக்கும் ரெப்டைலான இது மீன்களைப் பிடிக்க வசதியாக இருந்திருக்கும். ஆனாலும் இந்த நிலையிலேயே இது மீன்களைப் பிடிக்கப் பயனுடையதாகவே இருந்தது.

**டெரோடாக்டிலஸ்** *(Pterodactylus)* என்பது இன்னொரு வகைப் பறக்கும் ரெப்டைல் இதற்கு. நீண்ட வால் கிடையாது. ஏராளமான கூர்மையான பற்களும் கிடையாது.

**டெரானோடன்** *(Pteranodon)* என்பது டெரோடாக்டிலஸ்களிலேயே மிகப் பெரியது. இன்றைய எந்தப் பறவைகளையும்விடப் பெரிய இறக்கைகளைக் கொண்டது. பதிமூன்றடிகள் நீளம் இதன் இறக்கைகள். இதன் உடலுக்கு இதன் தலை மிகப் பெரியது. ரெப்டைல்களுக்கு மிகப் பெரிய உடலும் அதன்



விகிதாசாரத்துக்குப் பொருந்தாத மிகச் சிறிய மூளையும் இருந்தன. ஆனால் டெரா நோடன் இதற்கு விதிவிலக்கு. எல்லா டெரோசார்களுக்குமே ரெப்டைல்களு டையதைவிடப் பெரிய மூளை இருந்தது. ஆனால் இவைகளோடு ஒப்பிடும் போது டெராநோடனின் மூளை பெரியதென்று கூற முடியாது. இதன் மண்டை ஓட்டை ஆராய்ந்தால் இது விளங்கும். இதன் விநோதமான – கொல்லன் பட்டறைக் கல்லைப் போன்ற வடிவுடைய தலையில் நிறைந்திருப்பது வெறும் காற்றுத்தான் !

ராட்சத உருவிலான இந்தப் பறக்கும் ரெப்டைலினால் நன்றாகப் பறக்க முடியுமா முடியாதா என்பதைப் பற்றிக் கருத்து வேறுபாடு விஞ்ஞானிகளிடையே நிலவுகிறது. சிலர் இது சிறப்பாகப் பறக்கும் என்கிறார்கள். டெரோசார்களின் எலும்புகள் எல்லாம் – போலாகத் தான் இருக்கும். ஆகவே கனமற்ற எலும்பு, பரந்த இறக்கைகள் நன்றாகப் பறப்பதற்குக் கேட்பானேன் என்கிறார்கள். வேறு சிலர் இவற்றின் இறக்கைகளுக்குப் பலம் கிடையாது. இவற்றின் எலும்புகள் போலாக இருந்தாலும் உடல் கனமானது. ஆகவே, சிறப்பாகப் பறந்திருக்க முடியாது. என்கிறார்கள். பறவைகளுக்கு இறகுகள் உதிர்ந்துபோனால் அதனால் பாதகமில்லை, பறக்க முடியும். ஆனால் தோலினால் ஆன டெராநோடனின் இறகில் கிழிசல் ஏற்படுமானால் இவற்றால் பறக்க முடியாது. தரையில் உள்ள உணவை அடையக் கீழ் இறங்கும் டெராநோடனால் மறுபடி ஜிவ்வென்று பறவைகளைப் போல் மேலெழும்ப முடியாது. டெரோசார்களில் கடைசிப் படியில் வாழ்ந்தவை டெராநோடன்கள். ரெப்டைல்களின் காலத்தின் முடிவும், வானத்தில் பறந்து வாழ்ந்த டெரோசார்களின் அழிவும் ஒன்றாக இருந்தன.

இன்றையப் பறவைகள் உருவ அமைப்பில் பாம்பு, ஆமை, முதலைகளைப் பின்பற்றி இருக்கவில்லை. ஆனால் விஞ்ஞானிகள் பறவைகளின் மூதாதையர் ரெப்டைல்கள்தான் என்று கருதுகிறார்கள். ஆனால் பறவைகளின் தோற்றம் டெரோசார்களிலிருந்து ஏற்படவில்லை. நிலத்தில் வாழ்ந்த சிறிய ஊர்வனவற்றைச் சேர்ந்த ஜீவன்கள்– பின்னங் கால்களால் வேகமாக ஓடியவை – தரையிலிருந்து தாழ்வான மரக் கிளைகளுக்குத் தாவக் கூடிய கனமற்ற ரெப்டைல்கள்தான் பறவைகளாக உருமாறி இருக்கின்றன என்பது விஞ்ஞானிகளின் முடிவு. இத்தகைய ரெப்டைல்களின் செதிள்கள் மெள்ள மெள்ள இறகுகளாக மாறி இருக்கலாம். முன்னங் கால்கள் இறக்கைகளாகப் பரிணாமம் அடைந்திருக்கலாம்.

பறவைகளின் மூதாதையராக **ஆக்கியோப்ரெக்ஸ்** *(Archaeopteryx)* என்ற இனத்தைக் கூறுகிறார்கள். இதற்குப் புராதனமான இறகு என்று பெயர். இன்றையப் பறவைகளிலிருந்து மிகவும் மாறுபட்ட தோற்றம் கொண்டது இந்த ஆக்கியோப்ரெக்ஸ். இதன் இறக்கையில் பறக்கும் ரெப்டைல்களுக்கு இருந்ததைப் போல் வளைவான நகங்கள் இருந்தன.

இது வாழ்ந்த மரங்களில் கிளைக்குக் கிளை தாவக் கால்களோடு இறக்கைகளையும் பயன்படுத்தி இருக்கலாம். அதற்கு





<u>அட்டையில் :</u>

ராட்சத மிருகங்களைப் பற்றிக் கோகுலத்தில் படிக்கிறீர்களில்லையா? இம்மாதிரியான மிருகங்களைக் குழந்தைகள் கண்டு மகிழச் சிலைகளாக உருவாக்கி வைத்திருக்கிறார்கள் ஆந்திர மாநிலத்தில் உள்ள குழந்தைகள் பூங்காவில். டிரைஸரோடாப்ஸ் என்ற மூன்று கொம்புடைய கவசமணிந்த டினோசார்களைப் பற்றி படித்தீர்களே அதைத்தான் இந்தக் குழந்தைகள் வியப்போடு பார்த்துக் கொண்டிருக்கின்றன.

வண்ணப்படம் : எஸ். அஸத்

வசதியாகவே வளைந்த நகங்கள் அதில் அமைந்திருக்கலாம். இந்தப் பயங்கரப் பறவைக்கு அலகுகள் இருக்கவில்லை. அதற்குப் பதில் பற்களோடு கூடிய தாடைகள் இருந்திருக்கின்றன. இதனால் இது மாமிசப் பட்சிணியாக இருந்திருக்கக் கூடும். ஏரி, கடல் இவைகளின் கரையில் வந்து ஒதுங்கும் இறந்த மீன்களை உணவாகக் கொண்டு வாழ்ந்திருக்கும் இந்தப் புராதனப் பறவைகள்.


இன்றையப் பறவைகளுக்கு வால் பாகத்தில் எலும்பு மிகவும் குட்டையானது. ஆனால் ஆக்கியோப்ரெக்ஸ்களின் நீண்ட வால் பகுதியில் பல எலும்புகள் இருந்தன. இவற்றின் வால் தென்னங் கீற்றைப் போன்ற அமைப்பிலிருந்தது. இவை காக்கையின் அளவே இருந்திருக்கலாம். இப்பறவை இனம் நூற்றைம்பது மில்லியன் ஆண்டுகளுக்குமுன்னால் டினோசார்களின் காலத்தில் வாழ்ந்திருக்கலாம். ரெப்டைல்களின் காலத்தில் வாழ்ந்த மற்றொரு பறவை இனம் **ஹெஸ்பெரோனிஸ்** *(Hesperonis)* எனப்படுபவை. நீரில் மூழ்கி இறை தேடும் பெரிய பறவை இந்த ஹெஸ்பெரோனிஸ்கள். நீரில் மூழ்குவதற்கு ஏற்ற உடல் இதற்கு. நான்கு அடிக்கும் அதிகமான மெலிந்த உடல், நீளமான கூரான அலகு. துடுப்புக்களைப் போலப் பயன்படும் தோலினால் மூடிய விரல்களோடுகூடிய பலமான கால்கள். பிடித்த மீனைக் கெட்டியாகப் பற்றிக் கொள்ள அலகிலே ஏராளமான பற்கள். நீரிலே மூழ்கும் இந்தப் பெரிய பறவையினால் பறக்க முடியாது. காரணம் இவற்றுக்கு இறக்கைகள் பெயரளவில்தான் இருந்தன. இதனால் நன்றாக நடக்கவும் முடியாது. காரணம் உடலின் கோடியில் இவற்றில் கால்கள் அமைந்து இருந்ததே.

ஹெஸ்பெரோனிஸ் பெரிய பறவைதான். ஆனால் இறக்கையோடு கூடிய ராட்சதப் பறவைகள், நிலத்தில்தான் வாழ்ந்தன, நெருப்புக் கோழிகளைப் போல. ராட்சதப் பறவைகள் எல்லாம் பறக்க முடியாதவை.


பறக்காத பறவைகளில் மிகப் பெரியது **ஃபரோராகாஸ்**. படகோனியாவில் இருபது மில்லியன் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த பறவை இனம் இது. மிகப் புராதனமான பறவையானாலும், டினோசார்களின் மறைவுக்குப் பிறகும் இவை காணப்பட்டன. ஃபரோராகாஸின் தலை இன்றையக் குதிரைத் தலை அளவு இருந்தது. இது எட்டடி நீளம் இருந்தாலும் இதன் தலை பொருத்தமில்லாதபடி பெரியதாக இருந்தது. இதன் அலகின் நுனி கூராகவும் வளைந்துமிருந்ததினால் மாமிசங்களைத் துண்டு துண்டாகக் கிழிக்க முடிந்தது.

பறவைகளில் மிக உயரமானது நியூஜிலாந்தில் வாழ்ந்த மோஆஸ் *(Moas)* என்ற பறவைகள். இவற்றில் சில பன்னிரண்டு அடி உயரம் இருந்தன. இது சமீப காலம் வரைகூட வாழ்ந்து மறைந்த புராதனப் பறவை இனமாகும்.

பறக்க இயலாத மற்றொரு ராட்சத இனம் யானைப் பறவையாகும். இதன் விஞ்ஞானப் பெயர் **அபியார்னிஸ்** *(Aepyornis)* இது மடகாஸ்கரில் வாழ்ந்தது. மோவாஸைப் போன்று பெரியதில்லையானாலும் இது உதை பந்தைப் போன்ற முட்டைகளை இட்டது.







பருமனானவர்: என்னைத் தெரிகிறதா ?

மற்றவர்: உங்களைத் தெரிகிறது. உங்க பின்னாடி இருக்கிறவரைத்தான் தெரியமாட்டேங்கறது.

- பி. சுப்ரமணியன்

※

ஒருவர்: நீங்க நெடுநேரமாக இந்த அருவியையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே, நீங்கள் ஓவியரா ?

மற்றவர்: இல்லீங்க, நான் பால் வியாபாரம் செய்பவன்.

- இரா. கந்தசாமி

சீனு: ஏன்டா ரவி, நம்ம வாத்தியார் அடிக்கடி நம்ம மண்டையிலே மண்ணிருக்குன்னு சொல்றாரே, அவருக்கு எப்படிடா தெரியும் ?

ரவி: நீயே எழுதிப் பாரேன், 'மண்....டை'ன்னு அதிலே மண் இல்லையா ?

- ஆர். பி. சாரதி

※


"மற்றவர்களைவிட ஏதாவது ஒரு காரியத்தை உன்னால் நன்றாகச் செய்ய முடியுமா ?"


"முடியும்"

"என்ன?"

"என் கையெழுத்தை மற்றவர்களைவிட நான் நன்றாகப் படிப்பேன்."

- கே. வி. முரளி





தமிழாசிரியர்: ங, ஞ, ண, ந, ம, ன - இது இலக்கணத்தில் எதைச் சார்ந்தது ?

மாணவன்: ஜலதோஷ இலக்கணத்தைச் சார்ந்ததா சார் ?


டாக்டர்: தினமும் காலையில் பச்சை முட்டை சாப்பிடு என்றால் கிடைக்கவில்லை என்கிறாயே ?

நோயாளி: என்ன செய்வது டாக்டர் ? எங்கள் வீட்டுக் கோழி வெள்ளை முட்டைதானே போடுகிறது !

- ஆர். நடராஜன்





# நாய்க்குட்டி

வே. சபாநாயகம்

அப்பா அலுவலகத்திலிருந்து இன்னும் வரவில்லை. அவர் வரும் நேரம் நெருங்க நெருங்க, அகிலனுக்கும் மங்களத்துக்கும் 'திக் திக்'கென்று அடித்துக் கொண்டது. அப்பா இந்த நாய்க் குட்டியைப் பார்த்து என்ன சொல்வாரோ என்று பயந்தார்கள். அந்த நாய்க் குட்டியை அடுத்த வீட்டு ராமு விடமிருந்து வளர்ப்பதற்காக வாங்கி வந்திருந்தார்கள்.

'' ஏன் அண்ணு, அப்பா வளர்க்கக் கூடாது என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது?'' என்ருள் மங்களம்.

''கெஞ்சிக் கேட்டுப் பார்க்கலாம். இதோ பார், எவ்வளவு அழகாக இருக்கிறது. இதன் குட்டிக் கால்களும் வாலும்?'' என்ருன் அகிலன்.

''உடம்பெல்லாம் கறுப்பு; காதிலும் முகத்திலும் வெள்ளை. எவ்வளவு அழகு!'' என்று நாய்க் குட்டியை அணைத்துக் கொண்டாள் மங்களம்.

''அம்மா அம்மா! நீங்களும் அப்பா விடம் சொல்லுங்களேன். இதை நாங்கள் வளர்க்கிறேமே'' என்று அம்மா விடம் கெஞ்சினார்கள்.

''அதெல்லாம் அப்பா சம்மதிக்க மாட்டார். இது சின்னஞ் சிறு குட்டி! இப்போது தான் பிறந்திருக்கிறது. அதற்கு அதன் அம்மாவை விட்டு எப்படி இருக்க முடியும் ?'' என்ருள் அம்மா.

'' நாங்கள் நன்ருய் அதைப் பார்த்துக் கொள்வோம். வேளா வேளைக்குப் பசிக்காமல் பாலும் சோறும் போடுவோம்'' என்ருள் மங்களம்.

''அது வீடெல்லாம் அசிங்கப்படுத்தும். அப்பாவுக்கு அதெல்லாம் பிடிக்காது; திட்டுவார்'' என்ருள் அம்மா மறுபடியும்.

''அது அசிங்கம் செய்யாமல் நாங்கள் பார்த்துக் கொள்கிறேம்'' என்ருன் அகிலன்.


அம்மா சிரித்தாள்.


வெளியே ஸ்கூட்டர் சத்தம் கேட்டது. அப்பா வந்துவிட்டார் ! அகிலனும் மங்களமும் பயத்துடன் நாய்க் குட்டியை மேஜைக்கடியில் சாக்குப் போட்டு மூடிவிட்டு எழுந்து நின்ருர்கள்.

'டக் டக்'கென்று பூட்ஸ் ஒலிக்க உள்ளே நுழைந்தார் அப்பா. குழந்தைகள் இருவரும் பணிவாய் நிற்பதைப் பார்த்து, ''ஏது ரொம்பச் சாதுவாய் நிற்கிறீர்களே, என்ன விசேஷம் ? ஏதாவது விஷமம் செய்தீர்களா ?'' என்ருர்.

'' இல்லையே !'' இருவரும் ஏக காலத்தில் சொன்னுர்கள்.

''பின்னே என்ன? வரும்போது ஆளே தென்படமாட்டீர்கள். இன்று மட்டும்.....'' என்பதற்குள், ''வந்துப்பா..... வந்து.....'' என்ருள் மங்களம்.





''ஆமாம்ப்பா.... வந்து....'' என்று அகிலனும் இழுத்தான். அதற்குள் பொரிசுக்காளவரே வெளியே வந்து தன்னைக் காட்டிக் கொண்டு விட்டார்!

''கீய்ங்... கீய்ங்'' என்று கத்தியபடி அந்த நாய்க் குட்டி சாக்குகளைப் புரட்டிக் கொண்டு வெளியே ஓடி வந்து விட்டது.

'' சீச்சீ ! இதென்ன கர்மம் ! வெளியே தூக்கி எறி!'' என்று அப்பா அதைப்

பார்த்து விட்டுக் கத்தினார். குழந்தைகள் இருவரும் பயந்து விட்டார்கள்.

''அப்பா, அப்பா! அழகான நாய்க் குட்டிப்பா! நாம வளர்க்கலாம்பா'' என்றாள் மங்களம் பயத்துடன்.

''ஓகோ! இதுக்குத்தான் இத்தனை நேரம் இந்தப் பதவிசெல்லாமா? அதெல்லாம் கூடாது. நாய்க்குட்டியெல்லாம் அசிங்கம். அதோடே அதுக்குப் பாலும் சோறும் வேறு தண்டம்! மனுஷாளுக்கே காப்பிக்குப் பால் கிடைக்கலே, சாப்பிட சோத்துக்குப் பஞ்சமா இருக்கு!'' என்று இரைந்தார்.

''அப்பா, அப்பா! நான் குடிக்கிற பாலிலே அதுக்குக் கொஞ்சம் தந்துடறேம்பா!'' என்று கெஞ்சினாள், மங்களம்.

''நான் என் சாதத்திலே கொஞ்சம் போட்டுடறேம்பா!'' என்று கெஞ்சினான் அகிலன்.

''சே, சே! வேறு வேலை இல்லை, உங்களுக்கு? அது வீடெல்லாம் அசிங்கப்படுத்தும். பீடை!''

''இல்லேப்பா! அது அசிங்கப்படுத்தாமே நாங்க பாத்துக்கறேம்பா!'' என்றாள் மங்களம்.

''போனாப் போகட்டும். விடுங்களேன். பாவம், குழந்தைகள் ஆசைப்படுகிறது.'' என்று அம்மா சிபாரிசுக்கு வந்தாள். குழந்தைகள் அம்மாவை நன்றியுடன் பார்த்தார்கள். அப்பா சற்றுச் சமாதானம் ஆனவர் மாதிரி தெரிந்தது.

''சரி, சரி! வீட்டுக்கு வெளியிலே தான் வச்சுக்கணும். உள்ளே கூட்டி வரக்கூடாது. அது சத்தம் கித்தம் போட்டுதோ தூக்கி எறிஞ்சிப்பிடுவேன், ஆமா!'' என்று சொல்லிவிட்டு அப்பா டிரஸ் மாற்றப் போய்விட்டார். அகிலனும் மங்களமும் 'ஹையா!' என்று மகிழ்ச்சியில் துள்ளினார்கள். நாய்க்குட்டியை வாரி அணைத்துக் கொண்டு வெளி வராந்தாவுக்கு ஓடினார்கள்.

அன்று படுக்கப்போகும் வரை நாய்க்குட்டிக்கு நரக வாதைதான். இரண்டு பேரும் போட்டி போட்டுக் கொண்டு கொஞ்சினார்கள். தங்களது காப்பியில் ஆளுக்குக் கொஞ்சம் கொடுத்தார்கள். பிஸ்கட்டில் பங்கு தந்தார்கள். எதிர் வீடு, பக்கத்து வீடு எல்லாம் கொண்டு போய்க் காட்டினார்கள். அதற்குக் கழுத்துக்கு அழகாக ஒரு



பட்டையும், சங்கிலியும் வேண்டும் என்று அப்பாவிடம் கேட்டார்கள். ''ஆகட்டும்! இன்னும் ரெண்டு நாள் அது ஒழுங்காய் இருந்தால்தான்!'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

அதற்குள் மங்களம் தன் தலையில் கட்டும் பட்டு ரிப்பனை அதன் கழுத்தில் அழகாக முடிச்சிட்டுக் கட்டினாள். இப்போது நாய்க் குட்டி வெகு அழகாக, கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகளில் இருக்கிற நாய்க் குட்டிகள் போல் இருந்தது.

இரவு படுத்துக் கொள்ளும்போது இரண்டு பேர் பாய்க்கும் நடுவில் ஒரு துண்டுச் சாக்கை விரித்து நாய்க் குட்டியை அதில்படுக்க வைத்துக் கொண்டார்கள். மிக அடக்கமாக அது வாலைச் சுருட்டிக் கொண்டு படுத்தது அழகாக இருந்தது. அதன் பதவிசைக் குழந்தைகள் இருவரும் பாராட்டி மகிழ்ச்சி தெரிவித்தார்கள். சுற்று நேரத்தில் கண் அயர்ந்தார்கள்.

காலையில் கண் விழித்தபோது, அவர்களுக்கு முன்பே நாய்க் குட்டி எழுந்து போயிருந்தது. நாய்க் குட்டியைக் காணுமல் அகிலனும் மங்களமும் அங்குமிங்கும் சுற்றிப் பார்த்தார்கள். ''அய்யய்ய! உவ்வா....'' என்று திடீரென்று அகிலன் ஓங்கரிக்க எழுந்தான்.

''உவ்வா....!'' என்று மங்களத்துக்கும் ஓங்கரிப்பு வந்தது.

''அதுதான் அப்பா நாய்க் குட்டியைத் துரத்திவிட்டாரோ?'' என்று சந்தேகத்தைக் கிளப்பினான் அகிலன்.

''ஆமாண்ணு! இருக்கும். வாவா, அப்பா திட்டறதுக்குள்ளே 'க்ளீன்' பண்ணிடலாம்'' என்றாள் மங்களம்.

காரியம் முடிந்த பிறகு மெதுவாக வெளியே எட்டிப் பார்த்தார்கள்.

''அங்கே அந்த நாய்க் குட்டி, ஈசிச்சேரில் சாய்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த அப்பாவின் காலடியில், ''ஜம்'' என்று உட்கார்ந்தபடி, 'சவக் சவக்' என்று சப்தமிட்டபடி ஒரு கொட்டாங்கச்சியிலிருந்து பாலை நக்கிக் கொண்டிருந்தது.

''பார்த்தீங்களா? நீங்க எழுந்திருக்க இவ்வளவு நேரம்! இந்த நாய்க் குட்டியைப் பாருங்க. எவ்வளவு சீக்கிரம் எழுந்து பால் குடிச்சிட்டிருக்கு! போங்கள், சீக்கிரம் பல் விளக்குங்கள்!'' என்றார் அப்பா.

'அப்பாடா! அப்பாவுக்குக் கோபமில்லை. என்று நிம்மதியுடன், ''தோ போறோம்பா!'' என்று பல் துலக்க ஓடினார்கள்.

அதற்குள் அம்மா, ''டேய், சீக்கிரம் பல் விளக்கிக் குளியுங்கள். உங்களுக்கு டிபன் கொடுத்துவிட்டு நாங்கள் சிதம்பரம் வரை போய் வரணும்'' என்றாள் அம்மா.

''ஏம்மா, எங்களை விட்டுட்டா?'' மிரட்சியுடன் கேட்டாள் மங்களம்.

''ஆமாம்! அங்கே ஒரு துக்கம். நானும் அப்பாவும் மட்டும் போய்விட்டு சாயங்காலம் வந்துடறோம். மத்தியானத்துக்குச் சாதம் பிசைஞ்சு வச்சிட்டுப் போறேன். சமத்தா சாப்பிட்டு, வீட்டிலியே இருக்கணும், என்ன?'' என்றாள் அம்மா.

''அம்மா, அம்மா, நாங்களும் வரோமே!'' என்றான் அகிலன்.

''ஊஹூம்! இழவு வீட்டுக்கு நீங்க எதுக்கு வர்றது? நாங்க உடனே வந்துடறோம். அதோட, உங்க நாய்க்குட்டி வேறே இருக்கே. அதையும்கூட அழைச்சிக்கிட்டுப் போக முடியுமா? பேசாம அதை வச்சிக்கிட்டு விளையாடிக்கிட்டிருங்க'' என்றாள் அம்மா.

''நாய்க்குட்டி விஷயம் வந்ததும் அவர்கள் அம்மா அப்பாவுடன் போகிற ஆசை அடங்கிவிட்டது. ''ஆமாண்ணே நாய்க் குட்டியைப் பார்த்துக்கணுமே. நாம இங்கேயே இருக்கலாம். சரிம்மா! நீங்க போய்ட்டு வாங்க. நாங்கள் சமர்த்தா இருக்கிறோம்'' என்றாள் மங்களம்.

''சரி, நாய்க் குட்டிக்குப் பால்?''

''அதெல்லாம் காலையிலே குடித்தது போதும். உங்க பிஸ்கட்டிலே கொஞ்சம் போடுங்க. சாயங்காலம் காப்பிக்குள்ளே நாங்க வந்துடுவோம்'' என்றாள் அம்மா.

'பரபர' வென்று வேலைகள் முடிந்தன. அவர்களை விட்டு விட்டு அம்மாவும் அப்பாவும் பஸ்ஸில் ஊருக்குக் கிளம்பினார்கள். குழந்தைகள், நாய்க் குட்டியுடன் விளையாட ஆரம்பித்தார்கள்.

மதியம் போய் மாலை வந்தது. தெருவுக்கு வந்து அடிக்கடி எட்டிப் பார்த்தார்கள். நாழியாக நாழியாக, 'அம்மா அப்பாவை இன்னும் காணுமே' என்று கவலையாக இருந்தது அவர்களுக்கு. நாய்க் குட்டி அலுத்துப் போய் விட்டது. அம்மா அப்பாவின் பிரிவு, அவர்களை மிகவும் பாதிக்க ஆரம்பித்து விட்டது.

மணி ஐந்து முறை அடித்தது. மங்களத்துக்கு அழுகை வந்து விட்டது.

''என்னண்ணே இன்னும் காணோம்?'' என்று அழுதே விட்டாள். அகிலனும் அவளைத் தேற்ற முடியாமல் சேர்ந்து அழுதான்.

அதற்குள் நாய்க் குட்டியும் 'கீய்ங்... கீய்ங்' என்று கத்த ஆரம்பித்து விட்டது. ''சீ, சனியன்! இது வேறே கத்த ஆரம்பித்து விட்டது'' என்று சிணுங்கினாள் மங்களம்.

''பாவம், பாப்பா! நம்மாட்டம் தானே அதுவும்! அதுக்கும் அம்மா ஞாபகம் வந்துட்டுது போலிருக்கு'' என்று பரிதாபப்பட்டான் அகிலன். தங்களுக்குப் பெற்றோரின் பிரிவு தாளாத போதுதான் அவர்களுக்கு நாய்க்குட்டி மீது அநுதாபம் பிறந்தது.

''சரியண்ணே! கொண்டு போய் அதோட அம்மாகிட்டேயே விட்டுடுவோம். நம்மாலே ஒரு நாளைக்கே அம்மாவை விட்டுட்டு இருக்க முடியலியே — பாவம் அது நேத்தே பிடிச்சி அம்மாவை விட்டுட்டு எப்படித்தான் இருக்குதோ?'' என்றாள் மங்களம்.

''சரி, விட்டுடுவோம்.'' என்று அகிலன் குனிந்து நாய்க்குட்டியைத் தூக்கிக் கொண்டான்.

கொண்டு போய் நாய்க் குட்டியை அதன் தாயினிடத்தில் விட்டார்கள். அது தாயை இனம் கண்டு கொண்டு மகிழ்ச்சியோடு குடுகுடுவென ஓடித் தாயின் மடியில் முட்டி முட்டிப் பால் குடிக்க ஆரம்பித்தது. தன் குட்டியைப் பார்த்ததும் தாய் நாயும் ஓடி வந்து வாலை ஆட்டி வரவேற்றது. நிம்மதியோடு குழந்தைகள் வீட்டுக்குத் திரும்பினார்கள்.


திரும்பிய சற்று நேரத்தில் அம்மாவும் அப்பாவும் வந்துவிடவே இருவரும் ஆனந்தம் மிகுதியால் ஓடி அவர்கள் காலைக் கட்டிக் கொண்டார்கள்.

''ஏம்மா இவ்வளவு நாழி? நாங்கள் பயந்தே போயிட்டோம்'' என்று சிணுங்கினாள் மங்களம்.

''என்ன பயம்? அரை நாள் கூட இருக்க முடியலியா?'' என்றாள் அம்மா.

''டேய்! இதோ பார் என்ன வாங்கி வந்திருக்கேன், பார்!'' என்று அப்பா ஒரு பொட்டலத்தை அகிலனிடம் நீட்டினார். அகிலனும் மங்களமும் ஆர்வமுடன் அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தார்கள். ஏதாவது இன்பண்டம் இருக்கும் என்று ஆவலோடு பிரித்தவர்களுக்கு உள்ளே இருந்ததைப் பார்த்ததும் இருவருக்கும் அசடு வழிந்தது. அதில் இருந்தது ஒரு நாய்ச் சங்கிலி!

# தெரியுமா?



1905. பின்லாந்தின் எல்லைகளாக அமைந்துள்ள நாடுகள் எவை?

1906. ஆர்ச்சங்கல் (*Archangel*) எந்த நாட்டின் துறைமுகம் தெரியுமா?

1907. எதியோபியா எந்தக் கண்டத்தில் ஒரு பகுதியாக உள்ளது?

1908. ரஷ்யாவின் கடைசி மன்னரின் பெயர் தெரியுமா?

1909. இரண்டாவது உலகப் போரில் பசிபிக் கடலில் உள்ள தனது படைத் தளத்தின் மீது ஜப்பான் தாக்குதல் நடத்திய பிறகுதான் அமெரிக்கா போரில் குதித்தது. ஜப்பான் தாக்குதல் நடத்திய தளத்தின் பெயர் என்ன தெரியுமா?

1910. காசிரங்கா சரணாலயம் நம் நாட்டில் எங்குள்ளது? எந்த மிருகத்தைப் பாதுகாக்க உருவாக்கப்பட்டது இது?

1911. உலகின் மிகக் குளிர்ச்சியான பிரதேசம் எங்குள்ளது?

1912. உலகிலேயே மிகப் பெரிய பரப்புடைய சுத்த நீர் ஏரி எங்குள்ளது?

1913. கோடா என்ற நகரம் எந்த நதிக் கரையில் உள்ளது?

1914. பின்லாந்தின் தலைநகர் எது?

1915. உலகிலேயே மிகப் பெரிய வைரச் சுரங்கத்தின் பெயர் என்ன? எங்குள்ளது?

1916. மெகல்லன் ஜலசந்தி எங்கு உள்ளது?

1917. உலகின் மிகப் பெரிய ஏரி எது?

1918. இருண்ட கண்டம் என்று எதற்குப் பெயர்?

1919. லிக்னைட் நிலக்கரிச் சுரங்கங்கள் இந்தியாவில் எங்குள்ளன?

1920. டாஸ்மேனியா தீவைக் கண்டது யார்?

1921. உலகிலேயே மிக அதிகமான வெள்ளி உற்பத்தி செய்யும் நாடு எது?

1922. இரண்டாவது உலகப் போரில் பிரான்ஸ் எந்த நாட்டிடம் சரணடைந்தது?

1923. பம்பாயில் உள்ள இந்தியா வாசல் யாரைக் கௌரவிப்பதற்காகக் கட்டப்பட்டது?

1924. இப்போது சூயஸ் கால்வாய் கப்பல் போக்கு வரத்துக்குத் திறந்து விடப்பட்டுள்ளது. இது மூடப்பட்டது எப்போது?

1925. இந்திய தேசிய காங்கிரஸ் ஸ்தாபனத்தைத் தோற்றுவித்தவர் யார்?

1926. ''ஒவ்வொரு குடிமகனும் தனது கடமையைச் செய்வதை இங்கிலாந்து எதிர்பார்க்கிறது'' இப்படிச் சொன்னது யார்?

1927. இந்தியாவின் கடைசி வைசிராய் யார்?

1928. பிளாசிச் சண்டையில் ஆங்கிலேயர்களை எதிர்த்து நின்றவர் யார்?

1929. ஆந்திர மாகாணம் அமைக்கப்பட்டது எப்போது?

1930. உடன் கட்டை ஏறும் 'சதி' வழக்கம் தடை செய்யப்பட்டது எந்த ஆண்டில்?

1931. வாட்டர் லூ என்பது என்ன?


1932. பௌதிகத்துக்காக நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானி யார்?

## தெரியுமே!



1905. நார்வே, ரஷ்யா, ஸ்வீடன். 1906. ரஷ்யாவின் துறைமுகம். 1907. ஆப்பிரிக்காக் கண்டத்தின். 1908. இரண்டாம் நிக்கோலஸ். 1909. முத்துத் துறைமுகம் - பேர்ல் ஹார்பர் - தாக்கப்பட்டதும். 1910. அஸ்ஸாமில் ஒற்றைக் கொம்புடைய காண்டா மிருகங்களைக் காக்க 1925ல் நிறுவப்பட்டது. 1911. அண்டார்டிகாவிலுள்ள ஃபோல் ஆஃப் கோல்டு என்ற இடம். இங்கு மிகக் குறைந்த உஷ்ண நிலை மைனஸ் 57 டிகிரி சென்டிகிரேட். 1912. சுபீரியர் ஏரி. அமெரிக்கா கானடா நாடுகளின் எல்லையிலுள்ளது. 82,400 சதுர கிலோ மீட்டர்கள் பரப்புடையது. 1913. சம்பல் நதிக்கரையில். 1914. ஹெல்சிங்கி. 1915. தென் ஆப்பிரிக்காவில், கிம்பர்லி. 1916. தென் அமெரிக்காவின் தெற்கு முனையில். 1917. காஸ்பியன் கடல். ஆனால் இது ஒரு ஏரிதான் 1918. ஆப்பிரிக்காவுக்கு. 1919. தமிழ்நாட்டிலுள்ள நெய்வேலியில். 1920. டச்சுக்காரரான டாஸ்மான் என்பவர். 1921. மெக்சிகோ. 1922. நாஜி ஜெர்மனியிடம். 1923. ஐந்தாம் ஜார்ஜ் மன்னரை. 1924. கால்வாய் மூடப்பட்டது 1967ல். 1925. ஆலன் ஆக்டேவியன் ஹியூம். 1926. அட்மிரல் நெல்சன். 1927. லார்டு மௌண்ட்பாட்டன். 1928. சிராஜ் உத்தௌலா. 1929. செப்டம்பர் பதினைந்து, 1953ல். 1930. உடன்கட்டை ஏறுவதைத் தடை செய்தது 1829ல். 1931. பிரஞ்சு சக்ரவர்த்தியான நெப்போலியன் தோல்வியடைந்த போர்க்களம். தோல்வியை விளக்க வாட்டர்லூ என்று அழைப்பது வழக்கம். 1932· சர் சி. வி. ராமன்.

கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்



# சேமிப்பதற்கு யூகோ பாங்க்
# அருகாமையில் உள்ள
# வசதியான பாங்க்

நீங்கள் எங்கு இருந்தாலும் அங்கே உங்களருகில் ஒரு வசதியான யூகோ பாங்க் உள்ளது. சேமிப்பை எளிதாக்குவதற்காகவே. உங்களை வரவேற்கவும், உங்கள் சேமிப்பை வளரச் செய்யவும் நாடு முழுவதும் எங்கள் கிளைகள் பரந்து இருக்கின்றன.

விவரங்களுக்கு உங்கள் அருகில்
உள்ள யூகோ பாங்க் கிளையை
அணுகவும்

## யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

UCOC-50A TAM


ராசுவும் வாசுவும் கடத்தப்பட்ட கதை!
"அடடா, கொள்ளை போகுதே ஐயோ நம் நகைக் கடை தடுபா இந்தக் கேடிகளை."
"பொடியன்கள்...பிடி, பிடி போகவிடக் கூடாது போலீசுக்கு அறிவிக்க."
காருக்குள்ளே அடைபட்டுக் கடத்தப்பட்டனர் வெகுதூரம்.
குட்டி வீரர்களை இழுத்துப்போய் குடிசைக்குள்ளே பூட்டிவிட்டார்.
"நொந்திட வேண்டாம், இரு ராசு. வந்துவிடும் பார் போலீஸ்."
"சுவையான வழியினிலே சுவடு காட்டிவிட்டேன், சுகமாகச் சுவைப்போம்."
"பாதுகாத்தது பழரச பாப்பின்ஸ், பாதைநெடுக வாரியிறைத்தேன்."